# ஆதி மார்க்க னீதி மொழி

February 2023

இதழ் 19 – பிப்ரவரி 2023 வெளியீடு

© AMNA Trust, Chennai



**மூலமந்நிரம்**

முத்திபூர்ணம்!
மெய்யாக மெய்யாகவே சதுர்யுகங்னோடி கால மக்களிடத்திலும் உள்ள சர்வ மூலமந்நிர னிரூபிக மகான்மியராகிய யுகவான் சாலை ஆண்டவர்களே முத்தி பாலிப்பு.

**பாத பூஜை**

சுயம் பிரகாச னித்தியானந்ந பிரம்ம சொரூபத்தினை அறியாது அஞ்ஞானமென்னும் திமிரத்தால் குருடாயிருந்த எங்களுடைய கண்களை ஞானமென்னும் அஞ்ஞன சலாகையால் திறந்ந தேசிகேந்நிரரே தேவரீருடைய திவ்ய திருவடிக் கமலங்ஙளுக்கே னமஸ்காரம்.

**மகாசங்ஙல்ப மந்நிரம்**

மறலி என்கிற எமனுடைய அவமான அவஸ்தை வந்து தீண்டும் அடையாளம், கசப்பு தீட்டு பிணனாற்ற ஜலம் வெளியாகி யுகங் னோடிகால னரக வேதனைக்குப் போகாமல் அதைமாற்றி, பரமபத னித்திய மகிழ்ச்சி வாழ்வு வரத்தில் ஏற்றவே சதுர்யுகத்திலும் உண்டான எல்லா ஜாதி மத வேதங்களும் வந்நிருக்க அந்த அகமிய மகா அதிவல்லப தெய்வீக பிரம்மவித்தைச் செயலானது மானெடுங்ஙாலங்ஙளாக மக்கள் புழக்கத்தில் இல்லாது இந்த உலகத்தை விட்டு மறந்நு மறைந்நே போய்விட்ட இறுதிக்காலமாகிய இதுனேரம் எமபயத்தைக் கடத்தி மீண்டும் அதே பிரம்மவித்தைச் செயலாகிய சுவர்கப்பதி பரமபத முத்திச் செயலினில் ஏற்றி வைக்கும் கல்கி மகதி என்னும் மூக்குக்கு வெளியே மூச்சு ஓடாத தவமுடைய ஊண் உறக்கமற்ற எங்ஙள் குலதெய்வம் மெய்வழிச்சாலை ஆண்டவர்கள் மெய்மதத்தில் னாங்ஙள் சேர்ந்நு ஆகிக்கொண்டிருக்கின்றோம்!

எதார்த்த னன்மனத்தினர் யாராக இருந்தாலும் இதில் சேர்ந்நு தேவப்பிறப்பிலே பிறந்நு ஆகிக்கொள்வதற்கு ஆண்டவர்களுடைய ஆசீர்பாதம்!



Copyright © AMNA Trust, Chennai 

# குருபிரான் அவர்களின் முன்னுரை



ஆதிமார்க்க னீதி அவையின் அங்கங்களே எதார்த்த நன்மன சற்சன மக்களே, தீர்க்கதரிசனங்கள் நிறைவேறும் இடம் இன்னது தான் என அறிவிப்பதற்காக உண்டாக்கப் பெற்றதே ஆதிமார்க்க னீதி அவை.

செப்பும் பூமி சந்திர சூரியாளும் சேர்ந்த முன் கால யுகந்தொடுத்து ஒப்பி மகத்துக்கள் எல்லோரும் இன்னாள் ஓதி எதிர்பார்த்த அப் பரிசுக்குரிய பொருள் மனிதனின் தலைக்குள் தீர்க்கதரிசனம் நிறைவேறும் இடமாக, நாமமாக, கங்குல் பகலற்ற இடமாக, அறிவு இருக்கும் தலமாக, இருப்பதையே எல்லா வேதங்களும் ஓதுகின்றன. வேதம் ஓதும் செயல்களை உள்ளடக்கி உதயமாகி வரும் இச் சஞ்சிகையின் ஜனவரி மாத சிறப்பாக, புத்தாண்டு இன்னதுதான் என உணர்த்தும் சிறப்புரைகளும், புதிய அங்கத்தினர் சேர்க்கையும், அங்கத்தினர்களின் திருப்பணி போற்றி விருதுகள் வழங்கப் பெற்ற நிகழ்வுகளும் இடம் பெற்றுள்ளன.

அறிவின் தந்தையாக விளங்கும் பரிசுத்த ஆவி தெய்வம் ஒரு திருமேனி தாங்கி சாலை ஆண்டவர்கள் என்ற திரு நாமத்திற்கு உரியவர்களாக அவதாரம் செய்த திருநாள் இந்த ஜனவரி மாதத்தில் இன்றளவும் வெகு விமர்சையாக மெய்வழிச் சாலையில் கொண்டாடப் பெற்று வருகிறது. உலக மக்கள் கொண்டாடும் பொங்கல் திருவிழா சாலை ஆண்டவர்களால் கோளரி சாலையர் திருவிழா என எடுத்து வைக்கப் பெற்றுள்ளது. அதன் செயல் விளக்கத்தை ஆண்டவர்கள் தங்களின் இரண்டாம் காண்ட செய்யுளில், இல்லறத்தில் கிரகங்களின் அதிகாரமும், அதனை அஸ்தமிக்க செய்யும் கிரகஸ்தன் என்ற நிலை பற்றியும் அருளியுள்ளார்கள்.

ஜோதிட சாஸ்திரத்தில் உள்ள கட்டம் எனும் வீடாகிய இல்லறத்தில் உள்ள, 12 ராசிகளின் ஆட்சியை நீச்சமாக்கும் சக்தி கொண்ட கிரகங்களே, ராசி, நட்சத்திரங்கள் இவற்றின் நாயகமாக உள்ளது. கிரக நிலைகளை மாற்றும் செயலுக்கே பொங்கல் என பெயர். ஜனவரி மாதத்தில் வரும் மகரசங்கராந்தி என்ற தைப் பொங்கல் நாளே, சூரியனின் உத்தராயண பயணம் தொடங்கும் காலமாக உள்ளது. மேஷம் முதல் மீனம் வரை உள்ள 12 ராசிகளில் சூரியனின் பயணம் இரண்டு அயணங்களாக உள்ளது. காலச்சக்கரத்தின் பிடியில் சிக்கி பிறவி சுழலில் சிக்கித் தவிக்கும் மக்களுக்கு பிறவாமை அளிக்க ஆதி சான்றோர்கள் உண்டாக்கி வைத்த செயலே பொங்கல். இத் தேவரகசிய செயலை தீர்க்கதரிசனங்கள் யாவும் எதிர்பார்த்த தனித் தலைமை பெரும்பதியானவர் தோன்றி வெளியாக்கி வைத்த செயலே கோளரி சாலையர் திருவிழா. ஆண்டு தோறும் ஆதி மார்க்க னீதி அவையின் பொங்கல் திருவிழா வைபவம் சிவகாசியில் சிறப்பாக நடை பெற்று வருகிறது.

மேலும் சிறப்பாக, இம்மலரில், சுந்தரமூர்த்தி சுவாமிகள் தன் மனைவி சங்கிலி நாச்சியாரை தேடி வந்த இடமும், கன்வ மகரிஷியின் ஜீவசமாதியும், புஷ்பரதேஸ்வரர்



Copyright © AMNA Trust, Chennai

என்ற ஈஸ்வரன் உள்ள ஆலயமுமாகிய சூரியனார் கோவிலும், அங்கு நம் மக்கள் சென்று வந்த நிகழ்வுகளும், வருங்கால மக்கள் கோவிலுக்கு செல்வதின் நோக்கத்தை அறிவதற்கென இடம் பெற்றுள்ளன. இக்கோவிலின் தல விருட்சமாக விளங்கும் திருவோடு மரமும், எல்லாக் கோவில்களின் தலவிருட்சமும் மற்றும் ஆகம விதிகளும் உணர்த்துவது, வேர் மேலும் தலைகீழுமாக உள்ள கற்பகத் தருவையும், ஓரறிவாக விளங்கும் அதன் இறை குணம் போன்றே, மனிதனும் விளங்க வேண்டும் என்பதேயாகும். இவை யாவற்றையும் தாங்கிவரும் இந்த சஞ்சிகையின் அம்சங்கள், மற்றும் இசை வகுப்பின் நிகழ்வுகள் யாவற்றையும் நன்மக்கள் நிஜமான தேடுதலுடன், படித்துப் பயன் பெற, பரிசுத்த ஆவித் தெய்வம் பரம்பொருளின் திருவடி போற்றி வாழ்த்துகிறேன். நன்றி. நமஸ்காரம்.

*சாலை ரவி*

**நிறுவனர், ஆதி மார்க்க னீதி அவை**



Copyright © AMNA Trust, Chennai

*இறைவனை அடைய எல்லோருக்கும் ஆசைதான். ஆதி சுருதிகளின்படி வைத்துப் பார்க்கும்போது, அந்த இறைவன் மனோ வாக்குக் காயங்களுக்கு எட்டப்படாத அதை - வரம்புக் கடந்த அந்த ஸ்தானத்தை - அந்த வல்லபத்தை மக்கள் ஐந்நறிவு கொண்டு எட்ட முடியுமா? சப்தம் ஒரு எல்லை அளவுதான் கேட்கிறது. கண் ஒரு எல்லை அளவுதான் பார்க்கிறது. மூக்கு ஒரு எல்லை அளவுதான் நுகருகிறது. வாய் ருசித்த அளவுதான். தேகம் ஸ்பரிசித்த அளவுதான். இந்த ஐந்து அறிவுகளுக்கு உள்ளே பிரட்டிப் பிரட்டிப் பார்த்தால் என்ன பிரயோசனம்? இறைவனை எட்ட முடியுமா? எட்டவே முடியாது. ஆனால் அவனை எட்டக்கூடிய ஒரு வஜ்ஜிர தேகம் உனக்குள்ளே இருக்கிறது. இதைக் கூட்டி வைக்க வந்தவர்களை மக்கள் அல்லத்தட்டி விட்டார்கள். லேசாக எண்ணி, துச்சமாக எண்ணி, அலட்சியப் படுத்தினார்கள். ஆகாய விமானம் வருவதற்கு முன், நீ அதைக் கனவில் கண்டதுண்டா? நாம் ஒரு பெரிய படிப்பாளி என்று பட்டம் பெற்றிருக்கிறோம். ஆனால் விமானத்தைப் பார்த்ததில்லை. நீங்கள் படித்துப் பட்டம் பெற்றவர்கள் அல்ல. ஆனால் விமானத்தைப் பார்த்திருக்கிறீர்கள். நீங்கள் அதைப்பற்றி எம்மிடம் வந்து விமானம் இப்படி இருக்கிறது, அப்படி இருக்கிறது என்று சொன்னால், அது எப்படி எம் நினைவுக்கு உருவாகும்? நீங்கள் நினைத்தால் உங்கள் அறிவுக்கு வரும். எமக்கு எப்படி வரும்? வராது. அதுபோலத்தான் இவன் அறிவை வைத்து வேதப் பொருளை நினைப்பதும் இருக்கும்.*

***~ சாலை ஆண்டவர்கள்***



Copyright © AMNA Trust, Chennai

# ஆதி மார்க்க னீதி அவையின் 2023 ஜனவரி மாத அவை நிகழ்வுகள் – 2023 பிப்ரவரி மாத வெளியீடு

**01-01-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ புத்தாண்டு சிறப்பு சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. தியாகராஜன்**

**அங்கம திடத்தி லைம்புலக் கதவை …** என்ற குருமணிமாலை பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
புது வருடத்தின் சிறப்பை அறிய ஆர்வமுடன் வந்திருக்கும் னன் மக்களை ஆதி மார்க்க னீதி அவையானது வருக வருக என வரவேற்கிறது. ஒவ்வொரு வருடமும் உறவினர்கள் நண்பர்களிடத்தில் புத்தாண்டு வாழ்த்துக்களை பரிமாறுவதால் னம் அறிவில் மாற்றம் ஏதும் நிகழவில்லை.



**நாளென ஒன்றுபோற் காட்டி உயிர் ஈறும்**
**வாளது உணர்வார்ப் பெறின்**

என்ற திருக்குறளின் படி, முக்காலம் உணர்ந்த பெரியோர்கள் னம் மீது இரக்கம் கொண்டு, புண்ணிய நாளாக, நம் பாவ நாட்களை மாற்றி, அறிவுப் பிறப்பில் பிறப்பிக்கும் னாளே புத்தாண்டு.

*ஜீவசகோதரர் சங்கர்:* பெரியோர்கள் திரு **னா** கொண்டு நம்மை வருடுவதன் மூலம் பிறக்கும் நாளே வருடப்பிறப்பாகும். தன்னையறியும் தவமுறையின் இரகசியத்தை அறிந்து அடைவதன் பலனே புத்தாண்டாகும்.

*ஜீவசகோதரர் கிருஷ்ணமூர்த்தி:* புது வருடப்பிறப்பின் மெய்மை இரகசியத்தை, பொய்யகத் துறைந்துள்ள னம் மனதின் மூலம் அறிய முடியாது. குருபிரானின் அருளால் மெய்க்கல்வி கற்று, சாவரும் முன் சாகப் பழகும் பிரம்மவித்தையை பழகித் தேர்வதன் மூலமே அறிய முடியும்.

**குருபிரான் அருளமுதம்:**
சாகாக் கல்வி என்பது படிப்பதல்ல, பழகுவது. அக்கல்வியை கற்பதற்கு காலம் மிக அவசியமாக இருக்கிறது. சம்பாதிக்க முடியாத பொருளாகவும், இறைவன் இனாமாக தந்த பொக்கிஷமாகவும் இருக்கும் காலத்தை வீணாக்காமல் தன்னையறிவதே தகும் அறிவாகும். **தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை** என திருமூலர்பிரானும் அருளியுள்ளார். தன்னையறியும் செயலை பழகும் மக்களுக்கு னித்தமும் புது வருடமாக இருக்கும். தனித்தலைப் பெரும் பதியாக இருக்கும் குருவானவர், அறியாமை எனும் இருளில் இருப்பவர்களை அறிவுப் பிரகாசத்தில் ஏற்றி தெளிவான வாழ்வில் வாழ வைக்கும் வல்லவராவார். அறியாமை எனும் இருளை அகற்றும் அருள் வித்தானது ஆண்டவர்கள் ஆசீர்பாதத்தால் ஆதி மார்க்க னீதி அவையில் வழங்கப்பெற்று வருகிறது.

சிறந்த கைங்கர்யதாரர்கள் மற்றும் மின்னணு சஞ்சிகையை தொகுத்து வழங்கும் அங்கத்தினர்களுக்கு ஆசான் திருக்கரங் கொண்டு விருதுகள் வழங்கி ஆசீர்பதித்தார்கள். மேலும் புதிய அங்கத்தினர்களின் சேர்க்கையும் இனிதே நடைபெற்றது. அறிவைப் பெற்ற மக்களுக்கு னாட்கள் வரும் னாளெல்லாம் னலனாளாக, புது னாளாக அறிவு பூப்பேறும் னாளாக பிறக்கும் என ஆசீர்பதித்து தோத்திரப் பாடலுடன் அவையை நிறைவு செய்தார்கள்.



Copyright © AMNA Trust, Chennai 

**07-01-2023 ~ சனிக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்**

**தாகமும் தணியான் தன்னுயி ரறியா ...** என்ற ஞானமுறையீடு பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

**எமபடரடிபடு கோடாயிதக்கூர் திருவாக்கியம் எண் – 115:** உன் னினைவென்னும் பிடரியில் சூடேற்றவே தவ வணக்க முறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
***குழல் வணக்க பலன்:*** ஆசானின் னாதத்தை கேட்டு, அதன் படி னடப்பதே *குழல் வணக்கமாகும்*. **சொல்லக் கேள் ஞானவழி சுருக்க மின்னூல்** என்ற மெய்வழி னூல் பாடலுக்கிணங்க, ஆசான் சொல் கேட்டு அறவழியில் னின்று மனம் முத்தியடையும் செயலே *தூலமுத்தியாகும்*. **ஜீவனே திருச்சிற்றம்பலப் பொருளதாகும்.** னான் எனும் சிவமயப் பொருளாகிய ஜீவனை அறிந்து அடையும் ஜென்ம சாபல்ய செயலே *ஜீவமுத்தியாகும்*.

*ஜீவசகோதரி லாவண்யா:* **குரு ஸ்தோத்திரம் வாவிண் மேகக் குடைச் சைவ மேனியர் ...**
குருபிரானின் அருளமுதமே விண்மேகக் குடையாக னின்று னாத மழையாகப் பொழிகிறது. சைவத் திருமேனியின் விலாசத்தை அறிந்த ஆசானின் வாய்மையே கோவரத்ன குடையாக இருந்து னம் தலையைக் காத்து இரட்சித்து பாவம் நீக்கி, புலன்களை பளிங்காக மாற்றி மெய்ப்பலன் அளிக்கிறது.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:* **தாவீது நாயகம் வரலாறு** (ஆட்டிடையன் அரசனான கதை)
கர்த்தரின் விருப்பப்படியே இஸ்ரவேல் குல வழிகாட்டி சாமுவேல் நியமித்த அரசரே சவுல். தனது இழிகுணத்தால் இறை கட்டளைகளை மீறி அரசாட்சியை சீர்குலைத்த சவுலை நீக்கி பெத்லகேமிலுள்ள ஈசாவின் மகனான தாவீது னாயகத்தை (ஆட்டிடையன்) இஸ்ரவேல் ராஜாவாக சாமுவேல் திருப்பொழிவு செய்தார்.

***தாவீது னாயகத்தின் சங்கீதங்கள்:***
ஆதியாகமத்தில் சிருஷ்டியின் தொடக்கம் மற்றும் வீழ்ச்சி பற்றி கூறுவது *1 முதல் 41 சங்கீதங்கள்*. யாத்ராகமத்தில் மீட்பின் மூலம் சுதந்திரம் பெறும் தன்மையைப் பற்றி கூறுவது *42 முதல் 72 சங்கீதங்கள்*. லேவியராகமத்தில் பரிசுத்த ஆலய னுழைவு ஆராதனைகள் பற்றி கூறுவது *73 முதல் 89 சங்கீதங்கள்*. எண்ணாகமத்தில் வனாந்திர பயண வழிகளைக் பற்றி கூறுவது *90 முதல் 106 சங்கீதங்கள்*. உபாகமத்தில் துதிக்கு உரியவர்களின் போதனைகளையும் துதி னிறை வாழ்வு பற்றியும் அருளுவது *107 முதல் 150 சங்கீதங்கள்*.

**குருபிரான் அருளமுதம்: அமுத கலைக்ஞான போதம் - இரண்டாம் காண்டம்**
**புகலரிய முதுவலுன வுலகவன பரிசு...** பெரியோர்கள் வலு-**னா** கொண்டு அருளும் மெய் னிலைகளை கவனத்துடன் கைக் கொண்டவர்களே னித்திய வாழ்வான யுகப்பரிசைப் பெறுகின்றனர்.
**காணுதந்நாத் தோணுதுந்ந னுடம்பிற்குள்ளே...**(விருத்தம்). பிரணவ தேகத்தின் இரகசியமாகிய கதிஉடம்பு, அழிவுடலினுள் இறைவன் இனாமாக அளித்த அழியாப் புகழுடம்பாக இருக்கிறது. கால கால காலங்னடந்த இரகசியங்கள் பொதிந்த பிர்மாலயமாக, னம் இருப்பு மனையாக, சந்ததி பாரம்பரியமாய் னம் மகவுகளிருந்த இடமாக இலங்னும் இல்லறத்தில் குடியேறி வாழ்வதே சொர்க்கபதி வாழ்வாகும்.

**காணுவதுன் தாயாதி மனையுமாகும் ...** தாய்க்கு ஆதியாகிய தகப்பனிடத்தில் வாங்கி வந்த அமானிதமென்னும் மெய்ப்பொருளைக் கண்டு, ஆணும் பெண்ணும் இருந்து வளர் தலத்தில் னின்றால் அழகொளிரும் னம் னாமத்தை தரிசிக்கலாம்.

**ஆணும் பெண்ணும் தோணுமங்னே**
**ஆண் பெண்ணற்ற னிலையும்**
**அனைத்தும் தரிசனமாமெங்னள்**
**இனத்தின் பஞ்ஞாட்சரமே** **(ஐம்மணிப் பொதிகை)**



Copyright © AMNA Trust, Chennai 

ஆசானின் அருளமுதம் மூலம் இல்லறத்தின் விபரத்தை விளங்கிக் கொண்டவர்கள், உடலெடுத்த பலனடைந்து ஜெனனப்பிணி அற்று ஆனந்த உடலில் ஆழ்கிறார்கள்.

**இல்லற னல்லற மீதென் றீட்டிய ...** (கலி விருத்தம்). சுருதி முகத்தினோராகிய சற்குருவின் மறை னாவினிருந்து பிறங்ஙும் மணி மந்ர ஔஷதத்தை வல்லப செவி கொண்டு அனுபவிப்பவர்கள் பிறவிப்பிணி னீங்கி பிறவாமை எனும் பெரும்பேறு பெறுகின்றனர்.

**என்ன காலமி றைவன் திருவருள் ...** அவதார மூர்த்திகள் வரும் காலத்தில் இறைதிரு அருளால் கூடிக்கொண்ட மக்களே பாக்கியவான்கள். மண்ணிலே ஜென்மமெடுத்து கோள்களின் பீடிப்பினால் எமனிடத்தில் சிக்கிக் கொண்டிருக்கும் மக்களை கோளரி வாளுடன் வந்து காக்கும் திருமூர்த்தியரை எண்ணி னம் னெஞ்ஞும் களிக்க இயம்புவாம்.

**வினா: இல்லறமிவ் விரிவுணரா வடியே னுந்நன் ...** (விருத்தம்) குருபரனே தேவா! இல்லறமும் கிரகஸ்தனும் ஒன்றுதானா என்பதை அடியேனுக்கு அருள வேண்டுகிறேன்.

**விடை: கோதடா தனந்நராதி யென் குலக்கு மாரரே ...** (சந்நக் கலிவிருத்தம்) ஆதி மூவரான தானு, மால், அயன் தேடிய திருவடியினை சோதி கிரகஸ்தன் னிலையிலிருந்து சீருரைக்கிறேன். **இல்லறமுங் ஙிரகஸ்தன் செயல் வெவ்வேறாம் ...** (விருத்தம்) அகண்ட முடிச்சுடர் தேகமாகிய இறைத்திரு சன்னிதியில் சிவமயமாய் இருப்பவர்களிடம் னவக்கிரக கோள்களின் அதிகாரங்கள் செல்லாது. *காலச்சக்கர மென்னும் ஒன்பது கிரகங்ஙளும் னுழைந்து கொண்டு னடாத்து அதிகார வரம்புகளும் கண்டு* என ஆண்டவர்கள் அருளியுள்ளபடி, சாகாத் தலையாகிய இறைவனை தன்னுள் கண்ட மெய்ஆசானே சுருதிவிதி கடந்ந கிரகஸ்தனாம்.

**வினா: இருளறுஞ் ஞொல்லி யங்ஙுமு தயத்தை ...** (கலி விருத்தம்) குரு ஈஸ்பரா! அருனடை பாதம் னோவ அடிமைக்காக இறங்கி வந்து அருளும் பெருனிலைகளை சிரந்நாங்கி பணிந்து கேட்கிறோம். **கிரகஸ்த் தனின்ன தெனப் பொருத்தத் தோடே...** (விருத்தம்). காவி தாங்ஙி வருவதுவே சன்யாசமாகுமென்று உலக மக்கள் உரைப்பதன் விதமென்ன தயானிதியே சற்குருவே சாற்றும் னாதா.

**விடை: சாற்றுகின்ற சன்யாசங் ஙாவி யல்ல ...** (விருத்தம்) சன்யாசம் என்பது மனைவி, மக்களை தவிக்க விட்டு போகாமல், காவி உடை தரிக்காமல், காடுகளில் ஒளிந்து திரியாமல், சேற்றிலுள்ள பூச்சிபோல், புளியம்பழ ஒடு போல், தாமரை இலைத் தண்ணீர் போல் ஜகத்தினோடு சேர்ந்து வாழ்வதே சன்யாசமாகும். **சாற்றுகிறேன் வயது வந்ந மகனே கேளாய் ...** அறிவுப் பருவமடைந்த மகனே - இச்சா சக்தியாகிய ஏழு சதி மாயாசக்திகளை விட்டு விலகி, மனதற்ற பரிசுத்த னிலை பெற்று, சதா இறை நாட்டமுடன் இருந்து கற்பகத்தை கைக்கொள்வதே சதாக்ஞானம். ஐங்ஙாய அவிழ்தத்தை ஆசான் துணையோடு துரியத்தில் சமமாய் னிறுத்தி மகாமந்திரப் பொருளை தோற்றமாகத் தன்னுள் அறிந்தவர்களே சன்னியாசி என்ற ஆசீர்பாத அருட்கிரண விரிப்புகளுடன் ஆசான் அவையை னிறைவு செய்தார்கள்.

**08-01-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சத்துவாச்சாரி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. கவிதா கோபிநாத்**

*ஜீவசகோதரர் கௌதம்:* அனைத்து னாமமும் ஓர் பொருளாகிய ஜீவனையே குறிக்கும். அழிந்து போகும் இன்பத்தையே நாடும் மனிதன் அழியாத நித்திய பேரின்பத்தை ஓர் மெய்குருபிரான் மூலமாகத்தான் அடைய முடியும். சுகப்பிராப்தியான நித்திய இன்பம் அடைய ஆசானின் கையகப்பட்டு, அறிவு கண் திறந்து, இருதயம் விளங்கி, மனம் ஒருமைப்பட்டு வணங்குவதால் இல்லறமாகிய வீடு விடியும். மெய்குருபிரானின் இரக்கத்தால் மூன்றாவது கண் திறப்பிக்கப் பெற்று வினை முதல்வனாகிய இறைவனை சந்தித்தால் தான் வினையானது தீரும் இதுவே இறப்பு ஒழிக்கும் சன்மார்க்கம். முக்குணங்களால் மனம் மேலோங்கி அறிவு அடிமையாகிறது. ஆசானின் துணை கொண்டு வாசி, கால் மூலம் உச்சி அடைந்து மெய் மணம்



Copyright © AMNA Trust, Chennai 

கமழ, கோடி சூரிய பிரகாசமான இதயம் விளங்கி, பானமுதம் அருந்தி, காலன் அணுகா, கலாதீதன் ஆகலாம்.

**னிச்சய மாகவே வுச்சி வழிக்கண்**
**டூசித் தமர் போட்டால்**
**னேச முடன்பா லமுதமி றங்நும்**
**னீபரு கப்பருகென்** **(பிள்ளைத் தமிழ்)**

அடியும் முடியும் னடுவும் கண்டு அவ்வானவர்களும், அடக்கம் மடக்கிப் பிடிக்கத் தெரிந்தோரும் அனந்தர்கள் என மெய்வழி ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். கங்காளன் பூசும் கவசத் திருநீறு கொண்டு கவனம் மேம்பட நல்ல கதி அடைந்து வினை முடிந்து வினையோன் ஆகிய இறைவனை அறியலாம்.

*ஜீவசகோதரர் சங்கர்:* அவரவர் இடத்தில் ஜீவனாக சிவனாக மெய்ப்பொருளாக வழிநடத்தும் பொருளாக உள்ளிருக்கும் இறைவனை முன்னிலை குருவாக வரும் ஆசான் அருளால் அறிவிக்கும் போதே நாம் அறிய முடியும். தாயின் மிக்காங் கருணை கொண்டு அருளும் குருபிரானின் வாய்மைக்குள் ஆகும் பொழுது தான் மனிதன் என்ற பதத்திற்கு நாம் வருகிறோம். அறியாமையால் னரனாய் இருந்த நம்மை புனிதமான மறுபிறப்பால் மனிதனாக்கி, மீண்டும் நம் மனம் நழுகாமல் பாதுகாத்து, நாளினை மீட்டி, வாசி எனும் குருவின் ஆசீர்பாதத்தால் சிவபதம் அடைய வழி காட்டும் செயல் கொண்டதுவே ஆதி மார்க்க னீதி அவை. தோத்திரப் பாடலுடன் அவை நிறைவுற்றது.

## 08-01-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி சபை
## தொகுப்பு: ஸ்ரீ. ஜெய்குமார்

*ஜீவசகோதரர் சங்கர்:* அவரவர் இடத்திலும் அறிவாக விளங்கும் ஜீவனே சிற்றம்பலப் பொருளாக குருவாக உள்ளது. அகரப் பொருளையும், எழுதாத எழுத்தையும் அறிந்ததே உயிர். இதையே,

**எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்**
**கண்ணென்ப வாழும் உயிர்க்கு** என திருக்குறளில் அருளப்பெற்றுள்ளது.

னினைவு, உணர்வு, கவனம் இதனைக் கொண்டு எவ்வளவு தொலை தூரத்தில் இருக்கும் பொருளாக இருந்தாலும் ஒரு கணப்பொழுதில் பேரறிவு கொண்டு அறிய இயலும். ஜீவன் அவாவுடன் தாவி மனமாவதற்கு முக்குணமே காரணமாகிறது. முக்குணத்தைக் கடந்து நிர்க்குணத்தில் நின்றால் இறைவனுடன் இரண்டறக் கலக்க இயலும். ஒருவரின் எண்ணம், சொல், செயலுக்குத் தக்கவாறு வெளிப்படும் வாய்மையைக் கொண்டே நரன் மனு தேவன் என்ற நிலைகளை அறிய முடியும். தோற்றத்திற்கும் தோற்றம் அற்றதிற்கும் காரணமாக இருப்பது இருள். ஆசானின் அருளினால் இருள் விலகும். தோற்றம் இல்லாத ஒன்றை தோற்றத்திற்குள் ஆக்குவதை,

**தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்**
**தோன்றலின் தோன்றாமை நன்று** என திருக்குறளும் விளக்குகிறது.

இது எழுவகைத் தோற்றத்தில் தோற்றமில்லா நரனை ஆசானின் பரிசுத்த நாதத்தால் மனுவாக மாற்றும் திருச்செயலைக் கூறுவதாக உள்ளது.

*ஜீவசகோதரி சுமதி:* நான்கின் சிறப்பு -
*நாற்காரண ராஜனிலைகள்:* ***தூங்காமை:*** தூங்காமல் தூங்கி அறிவில் விழித்திருத்தல். ***துணிவுடமை:*** மெய்ஞானத்தில் தொடர்ந்து பயணிப்பதற்கான மனோதிடம். ***கல்வி:*** மெய்க் கல்வியாகிய சாகாக்கல்வியைப் பயில்வது. ***னீங்கானிலம்:*** தூல, சூக்கும, காரண,



Copyright © AMNA Trust, Chennai

மகாகாரணம் என்ற நான்கு தேகங்களும் கடந்து அப்பாலுக்கு அப்பாலாய் இருக்கும் அவ்விடமே னீங்கா நன்னிலம்.

***நான்முகம்:*** திசைகளற்ற இடத்தில் வீற்றிருந்து எண்திசையையும் காணக்கூடிய ஒன்றையே **காணுமெண் டிசையுமுன் முகமே ...** என ஆண்டவர்கள் அருளியுள்ளர்கள்.

*நான்கு தலம்:* ***சாலோகம்*** (மனம் சாகுமிடம்) = அறம். ***சாமீபம்*** (நமக்கு சமீபமாக உள்ள ஜீவன்) = பொருள். ***சாரூபம்*** (அத்வைத நிலையாகிய அன்புடன் கலத்தல்) = இன்பம். ***சாயுச்சியம்*** (இறை நிலையெனும் பிறவா நிலை) = வீடு. தெய்வ யோனியில் பிறந்தவர்களுக்கு அருளமுது ஊட்டி வளர்ப்பதில் தாயாகவும், நன்னெறியில் நின்று ஒழுக்கத்தை புகட்டுவதில் தந்தையாகவும், அறியாமையென்னும் இருளகற்றி அறிவை ஒளிரச்செய்து நம்முள் இருக்கும் தெய்வத்தை அறியச்செய்யும் குருவாகவும், ஒரே திருமேனியாக வருபவரே மெய்குருபிரான்.

***சதுர்த்தி:*** (வினாயகர் சதுர்த்தி) புள்ளியிலிருந்து வந்ததால் பிள்ளையார். இது எழுதாத எழுத்து, அடி-முடி-னடு எனப்படும் மூன்றாவது கண்ணின் இரகசியத்தை அறிவிக்கின்றது. அகங்காரத்தின் துணையோடு நான் என்பது மனம் என்னும் கண்ணாடி வழியாக வெளிப்படுவது சரியை. இதன் வழியாக ஜீவனைக் காண்பது கிரியை. சர்வ நாமமும் நாம் தான் என அறிவதே யோகம் (மனமும் மூச்சும் ஒன்றாக இணைவது). மனம் பூரிக்க பாவத்தையும், அறிவு பூரிக்க சாவா வரமாகிய ஞானத்தையும் அடைவர். இவை நான்கும் மனதின் சாதனப் பொருளாகும்.

***வர்ணாசிரமம்:*** மெய்ஞான இச்சையே இல்லாதவன் *சூத்திரன்.* மெய்ஞான இச்சையுடன் ஆசானின் பாதம் பணிந்தவன் *வைசியன்.* புலனைந்தையும் வென்று வைராக்கியத்துடன் இருப்பவன் *சத்ரியன்.* ஆசானின் கருணையினால் பிரம்ம உபதேசம் பெற்றவன் *பிராமணன்.*

***யுகங்கள்:*** கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம்.
***தேகங்கள்:*** தூலதேகம், சூக்குமதேகம், காரணதேகம், மகாகாரண தேகம்.
***யோனிகள்:*** புழுக்கம், வித்து, அண்டம், சினை.
***ஒழுக்கங்கள்:*** இந்திரிய ஒழுக்கம், கரண ஒழுக்கம், ஜீவ ஒழுக்கம், ஆன்ம ஒழுக்கம்.
***வேதங்கள்:*** ரிக், யஜுர், சாம, அதர்வண வேதங்கள்.
***இஸ்லாத்தின் படித்தரங்கள்:*** ஷரிகத், தரிஹத், ஹக்கிகத், மஹரிபத்.
***அந்தகரணங்கள்:*** மனம், புத்தி, சித்தம், அகங்காரம்.
***புறகரணங்கள்:*** கண், மூக்கு, செவி, வாய்.

இறைவனின் படைப்பில் அசையாத ஆகாயம் ஒன்றின் கீழ் அசையும் நிலம், நீர், நெருப்பு, காற்று ஆகிய நான்கும் உள்ளது. அசையும் நான்கையும் அசையாமல் ஆக்கக்கூடிய செயலே பிரம்மவித்தை.

*ஜீவசகோதரி சருபா:* பிறவிப்பிணி தீர இறைவனை அறிந்து அடைய வேண்டும். அதற்கு வேதம் ஓதுதல் மனிதனின் கடமை.

*வேதம்:* அந்தகரண கூட்டத்தின் தலைவன், ஆறாவது அறிவான மனம். இதை இன்னது என அறிவிப்பதுவே வேதம் (ஆசான் திருமேனி). ஓசையை ஒளியாக மாற்றுவதே பிரம்மவித்தை. இதை முத்தொழிலுடன் (படைத்தல், காத்தல், அழித்தல்) ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, வித்தில்லா வித்து மூலம் ஆசான் அவர்கள் தன் நாதத்தால் அறியாமையை சம்ஹாரம் செய்வது அழித்தல். அறியாமையை அகற்றி அறிவில் நிலைத்து நிற்பதற்காக கோதெல்லாம் நீக்கி மெய்யமுது அளிப்பது காப்பது. நரனை மனுவாக்கி பின் தேவனாக்குவது படைத்தல்.

*எவரது வாக்கியத்தினால் னிமிஷத்தில் அல்லது னிமிஷத்தினது பாதியில் தனது ஆத்மாவாகிய சிவத்தினை யறிந்து (புருஷன்) விமுக்தனாவனோ, அத்தன்மைய ஸ்ரீ குருவிற்கு னமஸ்காரம்.*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai 

*ஜீவசகோதரி செஜிதா:*
**தேகம்னம்போ லுள்ள எம்குரு னாதருக்கு ... (ஐம்மணிப்பொதிகை)**
புறத்தோற்றம் தேகம் அல்ல. அழியாத ஒன்றே தேகம். இறைவனின் சாயலாக இருக்கும் ஆசானின் ஓசை கொண்ட நடனத்தாலே மனு ஈசனாக ஆகுவதே இயல்பு.

*ஜீவசகோதரர் சொர்ணமதி:* கோபத்தின் விளைவுகள்: கோபத்தால் உடலில் பல உபாதைகள் ஏற்படும். ஐம்புலன்கள் செயலிழக்கும். இளமை குறைந்து வயோதிகம் அதிகரித்து ஆயுள் குறையும். மனித அறிவையும், ஆற்றலையும் மழுங்கச் செய்யும். கோபத்தைத் தவிர்த்து சகிப்புத்தன்மையை வளர்த்துக் கொள்ள, ஆசான் அருளிய வணக்க முறையை கவனத்துடன் பழகி தன்னைத்தானே சரி செய்து கொள்ள வேண்டும். காலனாகிய கோபத்தை காலால் உதைக்கும் கருத்தை குருமுகமாகத் தெரிந்து காற்றைப் பிடிக்கும் கணக்கை அறிந்து காலனை வெல்லலாம்.

*ஜீவசகோதரர் ரிஷி:*

**அங்஖ம திடத்தி லைம்புலக் கதவை யடைக்கும்பே ரறிவெனக்... (குருமணி மாலை)**
அங்கமதில் முதன் முதலில் உதித்த பொருளை உருவாக்கியதுவே முதல் பொருள். ஐம்புலக் கதவை அடைக்கும் பேரறிவு என்பது தன்னுடைய உயிரை பெட்டகத்தில் வைத்து பூட்டுவது. மனிதன் இறைவனின் இரகசிய பெட்டகம். இப்பெட்டகத்தை திறக்கும் சாவி, பேசுகின்ற லிங்கமாக உள்ளது. ஐம்புலனும் ஐந்து உலகமாக உள்ளது. புலன்கள் ஒவ்வொன்றிலும் வெளிப்படுவது நான். நான் அசைந்தால் அசையும் அகிலமெல்லாம் என்பதை அறிவதே அறிவு. ஆசானின் நாதம் வெளிப்படும் பொழுது மனம் அலையாமல் சுத்த ஓர் நினைவாக நின்று அதை உள்வாங்கும் போது மட்டுமே மெய்ஞ்ஞானத்தில் மேலோங்க இயலும். இல்லையேல் புலன் வழிபற்றி நம் வயது வாழ்நாளை இழந்து, பிறவிப் பெருங்கடலில் மூழ்கி வீழ்வோம் என்ற பகிர்வுகளை தொடர்ந்து தோத்திரப் பாடலுடன் அவை நிறைவுற்றது.

**12-01-2023 ~ வியாழக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. ஹேமலதா தியாகராஜன்**

**அந்த னாளில் அணைத்தெனை யாட்கொண்டு**
**விந்நை வீசும்வி ரிகதிர் ஏற்றியே...** என்னும் **குரு ஸ்தோத்திரம்** பாடலுடன் அவை நிகழ்வுகள் மலர்ந்தன.

**வான்மதி கொரல் திருவாக்கியம் எண்: 97** *சிரிக்க வேண்டியதிற்கு சிரிக்கும் குணம் ஆண்களுக்கு 36 வயது வரை இருக்கும்...* இந்த அழிந்து போகிற உலகப் பொருட்களின் மேல் வைக்கும் பற்றே பாரமாக நம் ஜீவன் மேல் ஏறிக்கொள்கிறது. இதனை திருவள்ளுவர் பிரானும்,

**தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க் கல்லால்**
**மனக்கவலை மாற்றல் அரிது** என அருளியுள்ளார்.

*ஜீவசகோதரி லாவண்யா:* **பள்ளி யையுமெய்ப் பால்தந்த வள்ளலைக் கள்ள மின்றிக்க லந்நந்த னாளிலே... (குரு ஸ்தோத்திரம்).** பள்ளி என்பதற்கு கற்கும் இடம் எனவும், துயில்கொள்ளும் இடம் எனவும் பொருள். திசையினை காட்டி திருப்பள்ளி காட்டும் மெய்குருபிரானின் ஒரு மொழியாம் குருமொழியின் மூலம் அந்த மெய்ப்பாலை கற்று, அவர்களின் நினைவில் நாம் இரண்டற கலந்தோமானால் தூங்காமல் தூங்கி சுகம் காணும் இடமான பள்ளியை நமக்கு காட்டி, வாழ்வாங்கு வாழும் ஆதம் பாதமான னற்றாளை நம் தலையான சென்னியில் ஏற்றி, ஜீவன் கண்டு ஜென்ம சாபல்யம் அடைய வைக்கிறார்கள்.

*ஜீவசகோதரர் வெங்கடேசமுத்து:*

**மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்**
**நிலமிசை நீடுவாழ் வார். (திருக்குறள்)**



Copyright © AMNA Trust, Chennai February 2023

இதனை சாலை ஆண்டவர்கள் இதயாசனத்தில் விளங்கும் தெய்வமலரில் உன்னை ஏற்றி வைக்கும் படிப்பே மலர்மிசை ஏகுதல் என அருளியுள்ளார்கள். ஆசானிடத்தில் உள்ள செம்மலரின் மூலம் நாம் உபதேச ரகசியம் அறிந்தால்தான் இதயாசனத்தில் விளங்கும் மாணடியெனும் திருவடியாகிய தெய்வமலரில் அமர முடியும். இதனையே வள்ளலாரும் **அம்பலத்தில் ஆடுகின்ற தெய்வம்** என அருளியுள்ளார். அத்தகைய அம்பலத்தினுள் தான் பொன்னம்பலம் உள்ளது. அத்தகைய திருவடிபேர் பெற்றவர்களே, நீங்கா னன்நிலமான நிலமிசையில் நீடு வாழ்வர். நீங்கா னன்னிலம் என்பது தூங்காமை, கல்வி, துணிவுடமையாக உள்ளது. இதனை சாலை ஆண்டவர்களும்,

**வெல்லடா மும்மலத்தை வெல்லு வெல்லு**
**வெல்லாத மூடருக்கு விள்ளா தெட்டே**

என மெய்வழி னூலில் அருளியுள்ளார்கள். இவை அனைத்திற்கும் தலைவனான மனம், ஆசானின் மலர்மிசையை பற்றி தொடர்ந்தால், அதுவே நம்மை நிலமிசையில் நீடு வாழ செய்யும்.

*ஜீவசகோதரர் தியாகராஜன்:* **முத்து முகப்படியோ முச்சந்தி வீதியிலே...** பாடல் எண் – 3 **(அழகு அணி சித்தர்).** இதனை சாலை ஆண்டவர்கள்,

**எட்டிரண்டும் பத்தான விடம்கா ணாதார்**
**எட்டியெட்டிப் பார்த்தாலு மெட்டித் தள்ளும்**

என மெய்வழி னூலில் அருளியுள்ளார்கள். இதில் எட்டு என்பது அகரமாகவும், இரண்டு என்பது எழுதாத எழுத்தாகவும் உள்ளது. அத்தகைய எட்டிரண்டும் பத்தான இடத்தை பற்றினால் எமபயம் அற்று, னாட்கள் அனைத்தும் நல னாளாகி மரணமிலாப் பெருவாழ்வு எனும், சன்மார்க்கமாக விளங்கும். பிசாசாக உள்ள நம் மனம் ஓர் மெய்குருபிரானை அடையும்பொழுது சைதன்யமாக, பொருட்காட்சியாக, னிலையாக, பிரம்மமாக மாறும் செயலே பிரம்மவித்தை. நம் மனதில் அறிவு எனும் ஜோதியை ஆசான் ஏற்றி, கோலமாய் உள்ள ஜீவனை அறிய வைத்து நம்மை பூரணமாக மாற்றுகிறார்கள். இதனை சாலை ஆண்டவர்கள் **கலிமா வெனும்பூரணம் – அறிந்நுகொள்ளும் கடம்திடத் துடனிருந் நிடும்போதே** என பூரணப் புதையலில் அருளியுள்ளார்கள். அத்தகைய பூரணமான புதையலை பரிபூரணமாக உள்ள ஆசானின் பெருங்கருணையினால் அறியலாம்.

**குருபிரான் அருளமுதம்:**

பெண்களை போகப்பொருளாக பார்க்கும் இந்த உலகில், தாய்மையை உணர்ந்தவர்களே மற்றவர்களையும் தாய்மை உணர்வுடன் பார்க்க முடியும். தமிழ் சமுதாயத்தில்தான் பெண்கள் போற்றப் படுகின்றனர். தமிழும் தாயும் வேறு வேறில்லை என்பதால் தமிழ்த்தாய் வாழ்த்து என எடுத்து வைத்துள்ளனர். அவரவர் இடத்தில் னின்று விளங்கும் பொருளே னான்முகன். அது கண், காது, மூக்கு, வாய் இவைகளின் மறை பொருளாக உள்ளது. பசு என்பது நான், ஆன்மா, சிற்றணு வடிவினனாக உள்ளது. ஒரேகால் கொண்ட அப் பசுவை வணங்குவதே விஸ்வரூப தரிசனை.

**அமுதகலைக் ஞானபோதம் - இரண்டாம் காண்டம்:**

**வினா:**
**பேரனைத்தும் பெற்றவா னானுன்னைப் பெற்றேன்**
**பெற்றவரில் யான்பெற்ற பேருன்னைப் பெற்ற...**

ஆசானின் ஆவிடையோனியில் மறுப்பிறப்பெடுத்து, அவர்களின் புதல்வராகினால் நம்முள் பூரணமாக உள்ள அறிவெனும் புதையலை அறியமுடியும். அத்தகைய அறிவுதான் சுத்த திருவடி. அதை பற்றிக்கொள்வதே மரணமிலாப் பெருவாழ்வு.



Copyright © AMNA Trust, Chennai February 2023

**விடை:**
**கூறுகிறேன் குருகுலத்தென் மைந்நா கேளு**
**குவலயத்தில் குருவுடைமைபிரமச் சாரி...**

இந்த தூல தேகத்தை விடுத்து, சூக்குமத்தில் பாய்ந்து, காரண தேகத்தில் காவியேறுபவர்களே பிரம்மச்சாரி. அத்தகைய பிரம்மத்தை சாரும்பொழுதான் அது ஆண், பெண் அற்றனிலை என அறியமுடியும்.

**வினா:**
**பேசிவரும் விஸ்வனிலைத் தலைவா போற்றி**
**பெருங்ஙிரணத் ததிபா துவாத சாந்த ...**

இந்த உடல் கடந்து, ஐந்து ஆகாசங்களாக உள்ளவைகளின் ரகசியமே வானப்பிரஸ்தன்.

**விடை:**
**அடியில் விழுந்நெழுந் தவனை அருகிருத்தி**
**அன்புடைய யென்மகனே அறைவேன் கேளாய்...**

னினைவில் பதியும் னாத மின்னுடலை கைப்பற்றுபவர்களே வானப்பிரஸ்தன் என்ற ஆசீர்பாத அருட்கிரண விரிப்புகளுடன் அவை நிறைவுற்றது.

**14-01-2023 ~ சனிக்கிழமை ~ சிவகாசி சிறப்பு சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்**

பிரம்ம பிரகாச மெய்வழிச் சாலை ஆண்டவர்களின் அவதாரத் திருநாளாகிய இன் னன்னாளில், **சாங்ஙுகோள் கடந்ந ஞானிக டமக்கும்...** எனும் தோத்திரப் பாடலுடன் குருபிரான் அவையை மலரச் செய்தார்கள்.

**குருபெருமான் அருளமுதம்**:

**அவதாரம்:** யுகங்ஙள் னான்கும் கைக் கொண்டு, அரியசூல் தங்ஙிய தனி மாமுதலே மகதி ஆண்டவராக அவதரித்தார்கள். இயேசுநாதர் கன்னி மரியம் அவர்களின் அரிய சூலிலிருந்து தேவ குமாரனாக அவதரித்த நிகழ்வும் இது போன்றே கூறப்பெறுகிறது. ஆதிமான்மியம் - வளர் குழந்நை குமார பருவத்தில் **கு** எனும் இருள் மாறி **கு மார ரான பருவமு மின்னுமே** என அறிவுப் பிழம்பெனும் கிரணர் பிறந்ததை அருளியுள்ளார்கள். **வேதகலை பழகிய ஆதீனச் சென்னெறிச் சீர் உழவுகோல் கைவரவடைந்ந பெருங்ஙுடிப் பிறப்புப் பெரியதனச் சமுசாரியர்களாகிய - னல விளைவுப் பொன்னில வளத்து...** அவதாரத்தின் சிறப்பை சம்பவ அதி தீர்க்கத் தெரிசனையாக வேதத்தில் அறுதியிட்டுக் கூறியுள்ளார்கள். அறிவுத் தெளிவு பெறும்போதே அவதாரமானது நிகழ்கிறது.

**தேனுக்குள் இன்பம் கருப்போ சிவப்போ**
**வானுக்குள் ஈசனைத் தேடும் மதியிலீர்**
**தேனுக்குள் இன்பம் செறிந்திருந்தாற் போல்**
**ஊனுக்குள் ஈசன் ஒளிந்திருந்தானே** **(திருமந்திரம்)**

எவருடைய நெஞ்சகத்தில் ஈசன் விளைந்து விளங்குகிறானோ அதுவே அவதாரம் நிகழுமிடம். ஒரு மெய் ஆசான் அருளால் மெய்யறிவைப் பெற்று, பிறந்ததின் கடமையை உணரும் போதே அவரவரிடத்தில் அவதாரமானது நிகழ்கிறது. மெய்யறிவு பெற்ற அவதாரத்தின் மகிமை, ஆண்டவர்களின் சொல்லுக்கு இலக்காகி வாழ்வதே ஆகும். மெய் என்பது மெய் ஆவதற்கென, சதுர்யுகம் கோடிகாலம் கடந்து வந்த சாலை ஆண்டவர்கள்,



Copyright © AMNA Trust, Chennai 

மக்களிடத்தில் இருக்கக்கூடிய மூலமந்திரத்தை அவரவர்க்கு சொந்தமாக்கி, முக்தி எனும் மோட்ச சாம்ராஜ்ய எல்லையுள் புகுத்தாட்டி வைக்கிறார்கள். யாவரிடத்தும் மெய் என்பது ஆதியாக, னீதியாக, ஜோதியாக, முதலாக, அறிவாக உள்ளது.

தத்துவரூப வடிவமாக உள்ள இறை சொரூபத்தை அறியும் அறிவைப் பெறுவதற்கான ஆவலைத் தூண்ட ஞானிகளால் உண்டாக்கப் பெற்றதே ஆகமவிதிப்படி கட்டப்பெற்ற கோவில்கள். அங்கு நமது வாழ்வில் நடக்கும் மகிழ்ச்சி மற்றும் துக்க நிகழ்வின் போது உண்டாகும் அதிர்வுகளின் சூட்சுமமும் குறியீடுகளாக அமைக்கப் பெற்றுள்ளது. தன்னை அறிதலாகிய ஞானம் என்பது நம்மை உயிர்ப்பிக்கும் பொருளை அறிவதே. *சத்திய வேதத்தில், கர்த்தராகிய ஆண்டவர் மண்ணை எடுத்து ஊதி உயிர்ப்பித்த செயல் என்பது, நரனாக இருந்த ஒருவனை மனிதனாக உயிர்ப்பிக்கும் ஆசானின் நன்னாதத்தை உணர்த்தும் செயலாகும்.* **மெய்வழி னாம னன்னாதமே! மெய்வழி ஆண்டவர் திருவடிகளே சரணம்!** திருவடி ஞானமே முத்தியளிப்பது.

இறை இல்லமாகிய மக்கா சென்று இறைவனை தரிசிக்க, தையல் இல்லா ஆடை அணிந்து செல்லும் மரபு உணர்த்துவது, தையல் இல்லா தோல் உடை கொண்ட இவ்வுடலுள்ள போதுதான் இறைவனை தரிசிக்க இயலும் என்பதாகும். ஆகம வேதகலைக்கு அதிபரின் அருளால், யோகதேகம் தூலதேகத்துள் பாய்ந்து, புகழ்வாய்ந்த புகழுடம்பை நாம் வாழும் காலத்திலேயே பெற வேண்டும். நரனாக இருந்தவனை குருபிரான் மனிதனாக்கி, காயத்திரி தேவியை அவன் இதயாசனத்தில் ஏற்றி வைக்கும் போதே அவன் தேவனாகிறான். அழி தேசத்திலிருந்து அழியா தேசத்தில் ஏற்றி வைக்கும் செயலே உபதேசம். புலனடக்கம், பொறியடக்கம், மனதடக்கம் எனும் அசையா நிலையை ஆளுகின்ற பொருள் எது என ஆய்ந்து பார்க்கும் செயலே அறிவு. இந்த புத்தாண்டில் வரும் நாட்கள் எல்லாம் அறிவில் ஏற்றம் உடைய நலநாளாக அமையவேண்டி பரிசுத்த ஆவி தெய்வத்தின் திருவடி போற்றி வணங்கி தோத்திரப் பாடலுடன் குருபிரான் அவையை நிறைவு செய்தார்கள்.

## 15-01-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி சிறப்பு சபை
### தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்

**ஆதி யுகத்தையன் கண்டிட னின்ற அருள் வரதர் வருகின்றார்** என்ற வேதாந்த தேசிகரின் திருப்பாடலுடன் அவை நிகழ்வுகள் உதயமாயின.

**குருபிரான் அருளமுதம்:**

ஆகாய வெளியின் மின்காந்த அலைகளே மனிதனிடம் எண்ண அலைகளாகவும், இதனையே கோயில்களின் உள்முக கட்டமைப்பில் வைத்து ஞானிகளும் அமைத்துள்ளனர். சகலத்தையும் முகர்ந்தவரின் நாமம் முகுந்தன் என்பது போன்றே, தாமரை போன்ற முகம் கொண்டவரின் நாமமாகிய பத்மநாபன் என்ற வாசுதேவ கிருஷ்ணரின் முகத்தில் இருந்து வந்ததுவே பகவத்கீதை. நெற்றிக்கண் எனும் **நுதற்கண்** கொண்டவரே குரு என்கிறார் வள்ளலார். பெரியோர்களால் அருளப்பெற்ற மெய்ச் செயல்களை மக்களிடத்தில் செயலாக்க உண்டாக்கப் பெற்றதே சட்ட திட்டங்கள் கொண்ட சபையாகவும், நினைவாகவும் உள்ளது. மக்களுக்கு எளிதில் ஒழிக்க இயலாத பிறவி பிணியை, ஒழிக்க வல்ல பிரம்மவித்தை செயலை நன்மக்கள் மூலம் உலகிற்கு அறிவிக்கவே அவையும் அங்கத்தினர் சேர்க்கையும் நடைபெறுகிறது. வள்ளலார் அருளிய மரணமிலாப் பெருவாழ்வின் உச்சபட்ச ரகசியமே நான்கு புருஷார்த்தங்கள். இதனையே மெய்வழி ஆண்டவர்கள், **எம பயத்தை தாண்டாத எவ்வாழ்வும் வாழ்வல்ல எமபயத்தைக் கடந்நிடிலோ எவ்வாழ்வும் வாழ்வாகும்** எனவும், **அறிவு ஒளிர ஆசானைத் தேடு** எனவும் அருளியுள்ளார்கள்.

இறப்பை நோக்கிய நமது பயணத்தை இறவாமையில் ஆக்குவதே சன்மார்க்கம். தீன் எனும் குண்டலியான திருவடியை அறிந்த பெரியோர்களின் சொல்லுக்கு இலக்காகி நிற்பதே புண்ணியம். **தன்னை அறிவதே தகும் அறிவு பின்னை அறிவெலாம் பேயறிவு** என்கிறார்



Copyright © AMNA Trust, Chennai 

வள்ளலார். ஜோதி சொரூபமாக, சுக உடலாக, அறிவாக, இயற்கை உண்மை கடவுளாக, ஓயாது, ஒழியாது, அயராது, அகலாது நம்மை இரட்சிப்பதே அருட்பெருஞ்ஜோதி. வேத வேதாந்த சாட்சியுடன் பரிசுத்த ஆவி தெய்வம் முன் நின்று நடத்தும் செயல்களாகவே இந்த அவையின் நிகழ்வுகள் யாவும் உள்ளன.

கர்த்தராகிய குருபிரான் நம்மை நரன் என்ற நிலையிலிருந்து மனிதனாக்கி, தேவனாக்கி, அணுவுக்கணுவாக நம்மிடத்தில் வீற்றிருக்கும் தெய்வம் என்ற நித்திய நிலையிலும் ஆக்குகிறார்கள். அவர்களின் இரக்கத்தால் வேணு(வேணி) எனும் புல்லாங்குழலின் பத்து துளைகள் போன்றே, நம்மிடமும் அவை கழுத்திற்கு மேல் இருக்கும் ரகசியத்தை அறியலாம். அவரவர் நாமமே அழியாத பொருள் என நிரூபிப்பதும், பிறவாமை எனும் ஞான சைதன்ய நிலையை நோக்கமாகக் கொண்டதுவே *ஆதி மார்க்க னீதி அவை*. சத்திய வேதத்தின் நித்திய வாக்கியங்கள் நிறைவேறும் இடம் நம் தலையே. காலத்தின் கணக்கறிந்து அவையின் மேன்மையான செயல்களுக்கு உற்ற துணையாக விளங்கும் அனைவரையும் **வாழ்வீர் சாலோக மா முதல் சாயுச்சியம்** என்ற பாடலுடனும், நீர் உயர வரப்பும், வரப்புயர நெல்லும், நெல்லுயர கோளும், கோளுயர கோனும் உயர்வான் என அருளி வாழ்த்தினார்கள். வருங்கால சந்நதியரிடம் மரணமிலாப் பெருவாழ்வாகிய இம் மெய்யை கொண்டு சேர்க்கும் பொறுப்பு நம்மிடம் உள்ளது என குருபிரான் அருளியதை தொடர்ந்து, தோத்திரப் பாடலுடன் அவை நிகழ்வுகள் நிறைவுற்றது.

## 15-01-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி ~ பொங்கல் சிறப்பு சபை
## தொகுப்பு: ஸ்ரீமதி. அருணா சுதர்சன்

**அங்கம திடத்தி லைம்புதக் கதவை**
**யடைக்கும்பே ரறிவெனக் கருளி...** என்ற குரு மணிமாலை பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**

யா, யாது எனும் நினைவே, முகமாக ஆன்மாவாக மதியாக வல்லிருளாகிய கடலாக உள்ளது. ஒத்த பொருளான உயிரின் மணத்தை அறிவிக்கும் ஜீவனே சிற்றம்பல பொருளாகும். னெற்றிக்கண் திறந்து, அறியாமை தெளிந்து, வேதம் உணர்ந்த பின்னரே ஈசனெனும் குருவாகிய அறிவை அறிய முடியும். உணர்வெனும் ஓங்காரம் கொண்டு ஜீவன் என்னும் சிவனை அறிந்தால் மறை மணி ஞான வாழ்வை வாழலாம். அன்னியமற்ற கற்பனை கடந்த பொருளாக இருப்பதே அருட்ஜோதி தெய்வம். கற்றவரும் கல்லாதவரும், அறிவு தேகம் பெற்று நற்றாளாகிய திருவடியை வணங்கி பிறப்பற்று, சர்வ வேதங்களும் பழகி உணர்வதற்கான சாகாக் கல்வியே மெய்க்கல்வி. இதனைப் பெற்றவரே சன்மார்க்கி என வள்ளலார் அருளியுள்ளார். அவர் அருளிய நான்கு விண்ணப்பங்கள் அறிவுடையோரின் விண் அப்பங்களாக உள்ளது. கோளரி சாலையர் திருவிழாவாகிய பானைப்பலி எடுக்கும் பொங்கல் திருவிழா அறிவில் மகிழ்ச்சி பொங்கச் செய்யும் செயலைக் குறிப்பதாகும்.





Copyright © AMNA Trust, Chennai 

*ஜீவசகோதரர் கௌதம்:* மனதோடு இயங்கும் ஒன்பது கோள்கள் அறிந்து, அதன் ஆதிக்கம் மாற்றி, மூன்றாவது கண் திறப்பிக்கப் பெற்று, மனம் அறிவாக, பிரம்மமாக மாறி, நான்கு தேக ரகசியமறிந்து அதில் குடியேறி மகிழ்ச்சி பொங்க வாழ்வதே னித்திய வாழ்வு. ஞான சூரியனான குருபெருமானின் அருளால், புண்ணிய காலமெனும் உத்ராயண காலமறிந்து அதில் குடியேறிக் கொள்வதே மகிழ்ச்சிப் பொங்கல்.

**குருபெருமான் அருளமுதம்:**

சொல் ஏர் உழவனின் கருணையால், அழியாத னித்திய இடத்தில் ஏறி என்றும் இருக்கும் ஈசன் சொரூபம் அறியும் நாளே பொங்கல். வாய்மையாகிய செவிச் செல்வம் கொண்டு காலமும், காலச் சக்கரமும் அறிந்து பொங்குமாங் கடலெனும் பிறவிச் சூழலில் சிக்காமல், நன்னெறி புண்ணியம் பொங்கி மகிழ்ச்சி பொங்க வாழும் நாளெல்லாம் பொங்கல் திருவிழா நாளே.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:* குருபெருமானின் அருளுடன் ராகு-கேது எனும் நிழல் கிரகங்களால் அசைவுக்கு வரும் மனதினை மீண்டும் அசைவற்றதாக்கி, முக்காலம் உணர்ந்து, காலத்தையும் காலச்சக்கரத்தின் சுழற்சியையும், தோற்றம் இல்லாமை என்னும் அரூப வடிவத்தில் அறிவதே மரணமிலாப் பெருவாழ்வு. எதார்த்த பரமகுருவின் அருளுடன் காற்றைப் பிடிக்கும் கணக்கறிந்து காலனை வெல்லும் அறிவை அறிய வைப்பதே *ஆதி மார்க்க னீதி அவை.*

**குருபெருமான் அருளமுதம்**:

கால கிரகங்களின் ரகசியம் அறிந்தவன் மனிதன் ஒருவனே. பிரம்ம சொரூபம், படைக்கும் எட்டாம் நாள் ரா ஞான நாளில், தீட்டில்லா மகா பரிசுத்த மணமுடன் நாம் பிறக்கும் நாளே பொங்கல். அப்படியான பிறப்பில் பிறந்து கால வட்டத்தில் குடியேறி மதி அமுதத்தை உண்டு, வீடடைந்து மகிழ்ச்சி பொங்க வாழ்வோம் என அருளி, தோத்திரப் பாடலுடன் அவையை நிறைவு செய்தார்கள்.

**19-01-2023 ~ வியாழக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. குமரேசன்**

**வான்மதி கொரல் வாக்கியம் எண் - 98:** *மதியாதார் வாசலை மிதியாதே* என்றும் *துஷ்டனைக் கண்டால் தூர விலகு* என்ற பழமொழிக்கு ஏற்ப மெய்ஞ்ஞான தேட்டம் இல்லாத எதிரான குணத்தை உடையவர்களிடம் ஒட்டுறவு வைத்துக் கொள்ள வேண்டாம் என இவ்வாக்கியத்தில் ஆண்டவர்கள் அறிவுறுத்துகிறார்கள்.

**குருபிரான் அருளமுதம்:**
தாங்கள் அறியாமையில் இருக்கிறோம் என்பது கூட அறியாமல், அழியும் உடலுக்கான தேவையே ஞானம் என அறியாமையை மக்களிடத்தில் விதைக்கும் மிக தீமையான செயல் செய்பவர்கள் போலி வேட ஞானிகள்.

*ஜீவசகோதரி லாவண்யா:* **புல்லும் பூமியு லகுள்ள னாளெலாம்... (குரு ஸ்தோத்திரம்)**
புல் என்ற ஓரறிவு முதல் ஆறறிவு கொண்ட மனிதன் வரை குறிப்பிட்ட வாழ்நாள் கடந்ததும் மடிந்து விடுகின்றன. எத்தனையோ ஜென்மங்களில் நாம் எடுத்த கன்மங்களைத் துடைத்து, ஜென்ம சாபல்யத்தையும், எல்லையற்ற நெடுங்காலம் வாழும் பேரின்ப தேகத்தையும் குருபெருமான் நம்மிடம் தந்து வாழ வைக்கின்றார்கள்.

**போனனாள் மீண்டங் னேறும்**
**பேரின்ப வடிவம் பெற்று**
**ஊனங்ங ளனைத்தும் தேய்ந்து**
**உன்புகழ் வானம் பாயும்.**



Copyright © AMNA Trust, Chennai 

**சென்மந்நோ றும்செய்த கன்மங்படைத் தேற்றவந்ந**
**சன்மார்க்க ரென்னாசான் சீர்பாதம் யான்மறவேன்**

என சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

*ஜீவசகோதரர் வெங்கடேசமுத்து:*

**வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு**
**யாண்டும் இடும்பை இல (திருக்குறள்)**

உலகத் தேவையும் உடலுக்கான தேவையும் மனித முயற்சி கொண்டு செய்து கொள்ளலாம். உயிர்கள் யாவும் சுகத்தை நாடினாலும் நித்திய சுகத்தை நாடுவது மனிதன் ஒருவனே. தன் முயற்சி கொண்டு பெற முடியாத இதனை ஒரு சற்குருபிரானின் மனோ நோக்கிற்கு இணங்கி நடந்தே பெறமுடியும். இதனையே,

**ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற**
**உத்தமர்தம் உறவு வேண்டும்**
**உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்**
**உறவு கலவாமை வேண்டும்...** என்கிறார் வள்ளலார்.

**மனதிலுறுதி வேண்டும்**
**வாக்கினி லேயினிமை வேண்டும்**
**நினைவில் நல்லது வேண்டும்...** என்கிறார் பாரதியார்.

**ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்**
**ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்...** என்கிறது உலக நீதி.

**எதுவேணும் - கேளும் சிங்நா - ஜெயசிங்நா**
**எதுவேண்டாம் சொல்லும் சிங்நா**

எது வேண்டும் எது வேண்டாம் என சாலை ஆண்டவர்களும் அருளியுள்ளார்கள்.

*ஜீவசகோதரர் தியாகராஜன்:* **அழகுஅணி சித்தர் பாடல் எண் 4: சம்பா அரிசியடி சாதஞ் சமைத்திருக்க உண்பாய்நீ என்று சொல்லி ....** அரிசி வகைகளில் சம்பா அரிசி விசேஷமானது. உடலை வளர்க்கும் அறுசுவை உணவிற்கான பயிர் ஆவணி முதல் மார்கழி வரையில் 6 மாத காலம் பயிர் செய்யப்படுகிறது. கலப்பையின் அடியில் **னா** என்ற பகுதி மண்ணை உழுது பண் படுத்துவதுபோல், மனித தூலமும் ஈஸ்வர சக்தியும் பெற்று வந்தவேதமாகிய ஆசானின் திரு**னா**வே பண்படாத நம் உள்ளத்தைப் பண்படுத்தி உயிர்ப் பயிர் செழிக்கச் செய்கிறது.

*ஜீவசகோதரர் வடிவேலன்:* **பொங்கல் சிறப்பு -** சூரியனை மையமாக வைத்து கொண்டாடும் பண்டிகையே பொங்கல். சூரிய, சந்திர ஒளிக் கதிர்கள் மூலம் உயிரினங்கள் வாழ்வது போல் ஞான சூரியனாக வரும் சற்குருபிரான் நமது அறியாமை அகற்றி உயிரின் ரகசியம் அறிவித்து இத்தூலத்தை விட்டு புகழுடம்பில் தேற்றி ஏற்றி, மகிழ்ச்சி பொங்கச் செய்து வைப்பதுவே பொங்கல் என திருமெய்ஞ்ஞான கொரலிலும் மற்றும் பானைப்பலிப் பாடலிலும் சாலை ஆண்டவர்கள் பொங்கலின் சிறப்பை அருளியுள்ளார்கள்.

**குருபிரான் அருளமுதம்: அமுத கலைக்ஞான போதம் (இரண்டாம் காண்டம்)**
பாடல் எண் 31 முதல்... அமுதக் கலசத்திலிருந்து பெறப்பட்ட16 பொருட்களின் உட்பொருள் ஆதார உயிர்ப்பு நிலையை போதமாக அருளுவதே இந்நூல். அணுவுக்கு அணுவாகவும் அண்டத்துக்கு அண்டமாகவும் இருப்பதுவே விஸ்வம்.


Copyright © AMNA Trust, Chennai

**அண்ட மோரணு வினுள்ளே காட்டிய**
**தொண்ட ருள்ளத்தொ டுங்குந்த னியரே** எனவும்,

**எல்லாண்டு எல்லாண்டு எண்ணிலடங் ஙாக்காலம்** எனவும் ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். அண்டம் அணுவாக இருந்த காலத்தையும் அணு அண்டமாக இருந்த காலத்தையும் குறிப்பது எல்லாண்டு. மனிதனின் சுத்தத் துறை இருதயத்தில் அணுவுக்கு அணுவாக, அண்ட பிரம்மாண்டமாக உள்ள இறைவனை காண வைக்கும் செயலே விஸ்வரூப தரிசனம். சாந்தி என்பது சலாமத்தையும், துவா என்பது இரண்டெனும் வாசியையும் குறிக்கும் சொல்லாகும். ஐந்து அவஸ்தைகள் கடந்த ஞான ஆகாயப் பெருவெளி நிலையே துவாத சாந்த நிலை. சூக்கும, காரணம், மகா காரணம் என்ற முக்திக்கான மூன்று தேகத்தின் நிலைகளையும் முப்புரி நூலிலங்கும் முகவரை கீறாத ஒளிதேகம் கை கொண்டவர்களே வானப்பிரஸ்தன்.

**விண்டுவிண்டு அந்நரத்தோ டுருவிப் பாயும்**
**விளங்கும்கா ரணதேகம் காவி யேறும்**
**கண்டசூக் குமம்தாண்டித் தூலந் நன்னில்**
**காஷாய மணிவதற்கிங் ஙருக னாகும்** **(பூரணப் புதையல்)**

கல்யாணம் செய்யாமல் காவித் துணி கட்டிக்கொண்டு குடும்பத்தை விட்டுச் செல்வது துறவறம் அல்ல. அகத்தில் தூல வாசனையற்று ஜீவதேகத்தில் குடியேறி வாழும் வாழ்க்கையே துறவறம் என அருளி குருபிரான் அவையை நிறைவு செய்தார்கள்.

**21-01-2023 ~ சனிக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்**

**குருபிரான் அருளமுதம்:**

தொன்று தொட்டு பாரத நாட்டில் தை அமாவாசையில் குளக்கரைகள், நதிகள், கடற்கரைகளில் முன்னோர்களுக்கு பித்ரு கொடுக்கும் சம்பிரதாயம், மனிதன் இறப்பதல்ல இன்னொரு தேகத்தில் வாழ்கிறான் என்பதை வாழும் மக்களுக்கு உணர்த்தவே ஏற்படுத்தப் பட்டுள்ளன.

**கோடாயிதக் கூர் திருவாக்கியம் எண் – 116 :** தேகாதியந்தத்திலும் உள்ள பிரளய ஆயுதத்தின் கூரை ஜெயிக்கவும், தேகமுத்திக்குமே குழல் வணக்கம். ஜீவன் முத்திக்கான வழி னிஷ்டை என்பதே.

**குருபிரான் அருளமுதம்:**

**உறக்கம ணுகாப்பெருவா - னோசை வீசும்**
**உள்ளகத்தி லேழெக்காளம் ஒலிப்பதின் னேர்**
**(தரணியில் இல்லாத ஒருதனிச் செயற்பதி)**

ஆசானின் னாதத்தினால் தூங்காமல் தூங்கி சுகம் பெறுவது ஜீவன் முத்தியாகவும், மெய்வணக்க நிலைகளின் மேன்மையை அருளும் பெரியோர்களின் ஏழிசை னாதமே தேக முத்திக்குரியது என்பதும் ஆகும்.

*ஜீவசகோதரர் விஜயகுமார் :* **பரிசுத்த வேதாகமம்:** இறைவனின் அருளாசி பெற்ற தாவீது நாயகம், இஸ்ரவேலருக்கும் பெலஸ்தியர்க்கும் நடந்த போரில் கோலியாத் எனும் மாவீரனை தந்திரத்தால் எளிதாக வென்று மூன்றாம் முறையாக திருப்பொழிவு ஏற்றார். ***னான்மறைகளின் ஏகத்துவம்:*** பண்டை நான் மறைகளே, அதன் பின் தோன்றிய



Copyright © AMNA Trust, Chennai 

இதிகாசம் காவியம் மறை நூல்கள் தோன்ற காரணமாக இருந்தது. பல்வேறு காலங்களில் வந்த மதங்கள், ஜாதிகள், மூலமந்திரம் அனைத்திலும் உள்ள மெய்ப்பொருள் ஒன்றே ஆகும்.

*ஜீவசகோதரர் கோபிநாத்:* **ஸ்ரீமத் பகவத் கீதை:** மகாபாரதத்தின் கருப்பொருளாக னின்று விளங்குவதே பகவத்கீதை. வியாச பகவான் கூற வினாயகர் எழுதியதன் தாத்பரியம், குருபிரானின் ஒரு மொழியின் மூலம் உண்டானது கீதை எனும் பகவானின் உபதேசமாகும். சாந்தனு மன்னரின் வம்சத்தில் வந்த திருதராஷ்டிரனின் 100 புதல்வர்கள் (கௌரவர்கள்) மற்றும் பாண்டுவின் 5 புதல்வர்கள் (பஞ்சபாண்டவர்) இடையில், அஸ்தினாபுரம் அரியணை கைப்பற்றும் கதைக்களமே குருக்ஷேத்திரப் போர். *சாந்தி த்ரியம் (3), ஆத்ய பஞ்சகம் (5), யுத்த பஞ்சகம் (5), அந்தியா பஞ்சகம் (5)* ஆகிய 18 அத்தியாயங்கள் கொண்டது மகாபாரதம். அகர வடிவாக வரும் குருபிரானின் இரக்கத்தால் அறியக்கூடிய அகமிய இரகசியமே பதிளெட்டு (18) பருவங்கள்.

*அஸ்தினாபுரம்:* (அஸ்தி - எலும்பு) எலும்பை ஆபரணமாக அணிந்திருக்கும் ஆன்மாவின் இரகசியத்தை அறிந்து ஜீவசிம்மாசனத்தில் ஏறுவதற்காக மனதிற்கும் அறிவுக்கும் நடக்கும் யுத்தமே குருக்ஷேத்திரப் போர்.

*ஜீவசகோதரர் சிரஞ்ஜீவி:* **திருஅருட்பா:**

> **அருட்சிவ நெறிசார் அருட்பெரு நிலைவாழ்**
> **அருட்சிவ பதியாம் அருட்பெருஞ் ஜோதி**

ஒழுக்க னெறி சார்ந்து னீதி வழுவா னெறிமுறையில் நாம் குருவருளால் சிவயோகம் பழகி சிவா அனுபவம் பெறும் னாளே தன்னிலை கண்டுணரும் மெய்ஞான னாளாகும். ஆசானின் அன்பெனும் விசேஷத்தால் மட்டுமே மெய்ப்பொருளைக் கைக்கொள்ளலாம் என்பதை, **அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே ...** என அருளுகிறார்கள். கடவுளை கற்பனையாக எண்ணுபவர்களை, **கலையுரைத்த கற்பனையை னிலையெனக் கொண்டாடும் கண்மூடி வழக்கமெல்லாம் மண்மூடி போக** எனவும் சாடுகிறார்கள். புறஉலக வாழ்வு னோக்கி ஓடிக் கொண்டிருக்கும் னம் மனமானது, குருவின் அருளால் அசைவற்ற சைவ னிலைக்குள் னிலை பெறுவதே சன்மார்க்க செயலென வேதங்கள் பறை சாற்றுகிறது.

*ஜீவசகோதரர் சங்கர்:* **அமுத கலைக்ஞான போதம் (இரண்டாம் காண்டம்) :**
**வாழ்வெனது வாழ்வெதுவும்...** (பாடல்) குருவின் அருளால் நித்தியனாக படைக்கப்பெற்ற மனு அதற்கான பாடுபடாமல் அனித்திய அழிவுடல் வாழ்வையே விரும்புகிறான். அறம் என்பது வேள்வி, அனுஷ்டானம், தானம், தர்மம் பற்றி குறிப்பதா என சீடன் விவை,
**தேவ னன்னிலை தேடிப்பின்...** (பாடல்) அமரர் முதலான எழுவகைத் தோற்றத்தில் முதல் னிலையே தேவன். குருபிரான் தன் ஓசை கொண்ட னடனத்தால் னரனை மனுவாக்கி பின் தேவராக்குகிறார்கள்.
**விளம்புகிறேன் அறமென்ற விபரந் நானும்** (பாடல்) அறம் என்பது வேள்வி, ஜெபம், தானம், தர்மமல்ல. மனமெனும் மாய்கையால், கலகம், இடர், கவலை, பயத்தால் ஜீவன் தளும்பி னிதம் அலையாமல், தலையான தலை கண்ட ஆசானின் அருளால், தன் எனும் ஜீவகுகையில் குடியேறி கருப்பை கூடி கலந்த வினையை நீக்கி மனம் அலையாமல் ஜீவன் சிவமாகி பிர்மானந்தத்தில் இருந்து வாழ்வதே அறம், என்ற பகிர்தல்களுடன் அவை இனிதே னிறைவேறியது.


Copyright © AMNA Trust, Chennai

**22-01-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. பானுமதி குமரேசன்**

**அரியருள் வருகும் அருமறை விதியோன்...** என்ற குருமணிமாலை பாடலுடன் அவை நிகழ்வுகள் மலர்ந்தன.

*ஜீவசகோதரி ஆர்த்தி:* **எண்ணுகின்ற நல்லெண்ண மனைத்தையும்...** என்ற பாடலைத் தொடர்ந்து குருவின் சொற்படி, எண்ணமானது பிரம்ம லயத்திலேயே இருந்தால் அதுவே பண்ணுருந் தனித் தலைமைப்பதியாகவும், வண்ண சித்தர் காலமாகவும் இருக்கிறது. இதை அறிந்தவர்களுக்கு இறைவனின் பரிசுத்த ஆசீர்பாதமாகவும், அறியாதவனுக்கு எட்டாக்கனியாகவும் உள்ளது. சர்வ சாட்சியாக நின்று விளங்கும் இறைவனை குருனாயகம் அவர்களின் திருவாக்கின் துணை கொண்டே அறிய முடியும்.

*ஜீவசகோதரி கனகத்தாய்:* **ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை ... அடி போற்றுகின்றேனே**. குருவிற்குத்தான் ஐங்கரன், ஆனமுகம், வியாழமுகம், விநாயகப் பெருமான் எனப் பெயர். ஐவகை பொறுப்பாகிய அண்ணல் ஐந்தொழில் புரியும் குருவாக விளங்குகிறார். அறியாமையை சங்காரம் செய்து அழித்து, மனம் பிரம்மம் என்ற நிலையை அவரவர் முகத்தில் வைத்து படைத்து, படைத்ததை அழிவுக்குப் போகாமல் காத்து ரட்சித்து, நவகிரகங்களின் தன்மையை மறைத்து, கிரகத்தின் தன்மையால் மனம் கீழ்நோக்கி பாய்ந்து புலன்வழி ஓடாமல் அருள் புரிகிறார்கள்.

**துணையோடு அல்லது நெடுவழி போகேல்.** ஐவழி விளைவின் அப்பால் இருக்கும் மெய்வழியே நெடுவழி ஆகும். புலன்களின் தலைவனான மனம் ஐந்து புலன்களாகிய ஐந்து கரங்கள் கொண்டு படைப்பு உண்டாக்கி, வயது, வாழ்நாளை போக்கி எமனிடம் சேர்க்கிறது. ஐந்தொகை கணக்காகிய உயிர் கணக்கு விரயமாகாமல் இருப்பதற்கே வழிபாட்டு முறைகள்.

கண் - இறை தரிசனமாகிய கோபுர தரிசனம், அபிஷேகம், ஆராதனை காண்பது.
செவி - மணியோசை, மந்திரங்கள், பாடல்கள் உபன்யாசங்கள் கேட்பது.
மூக்கு - வாசனை திரவியங்கள், மணமுள்ள மலர்களை நுகர்வது.
வாய் - பாடல்கள் பாடுவது, மந்திரங்கள் உச்சரிப்பது, இறைவனுக்கு படைத்த அமுதம், பிரசாதம் உண்பது.
உடல் - விரதம், பூஜை, யாத்திரைகள் மேற்கொள்வது.

இவையாவும் மனித மனத்தை அழிவு பாதையிலிருந்து மாற்றி மெய் உணர்வு பெறுவதற்கென பெரியோர்கள் ஏற்படுத்தி வைத்த வழிபாட்டு முறைகள்.

> **இடமதுவும் னிச மென்றாற் பொறிக ளோடா**
> **திருந்நுவிடு கோடியொளி காந்றி வீசும்**      **(மெய்வழி னூல்)**

இடம் என்பது பொறிகள் ஓடாத அறிவு இருக்கும் தலம். ஆசானின் நாதம் நம்மை அறிவு இருக்கும் இடமான நித்திய தேகத்தில் குடியேற்றி சொர்க்கபதி சந்ததியாய் வாழ வைக்கும்.

*ஜீவசகோதரர் கார்த்திகேயன்:* **ஆதியாய் மூல வஹறெனுங் ஙடலென்... கடலே (குருமணிமாலை)** ஒரு மனிதனை உருவாக்குவது பெரியோர்களின் நாதமே. அதுவே அருள் மழை -அருள்மொழி. இதனை ஆங்கிலத்தில், Raise your words, not your voice என குறிப்பிடுவார்கள். குருவின் மனம் அகநோக்காகவும், நமது மனம் புறநோக்கமாகவும் உள்ளது. யோக வாசிஷ்டத்தில், மனமாகிய மந்திரிக்கு ஆன்மாவாகிய அரசன் சேவகம் செய்வதையும்,

> *எதனால் ஸ்தாவர ஜங்கமமான ஜகத்துயாவும் வியாபிக்கப்பட் டிருக்கின்றனவோ, அது னிர்க்குணமும் னிர்மலமும் சாந்தமுமான பிரம்மமாம். அப்படிப்பட்ட பிரம்மவடிவ ஸ்ரீ குருவிற்கு னமஸ்காரம்.*
>
> ***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai                                        

குருவின் உதவி கொண்டு மனதை அறிவாக மாற்றி ஞானத்தை அடையலாம் என்றும் கூறப் பெற்றுள்ளது. மனமற்றதே பரிசுத்தம். முக்குணங்களில் இருந்து விடுபட்டு **நான்** என்ற எண்ணம் கடந்து அகமியமாகப் பயணித்தால் மனமே பிரம்மம் என்பதை உணர்ந்து ஞானத்தை அடையலாம்.

*ஜீவசகோதரர் சோலையப்பன்:* எதார்த்த உள்ளம் கொண்டோர்க்கு, புண்ணியமே ஒரு உரு தாங்கி குருவாக அவதரித்து அவர்கள்முன் வருகிறார்கள். குருவின் நிலையை நாமும் பெறும் போது தான் அவர்களை முழுமையாக உணர முடியும்.

**எரியுமெ மனைப்பிரிந்து -ஆறண்டம்**
**எட்டியேபாய் கின்றவர்பேர் ராஜயோகி** **(பூரணப் புதையல்)**

தன்னை அறியும் அறிவை ஆசான் மூலம் அறிந்தால், நெருப்பு வடிவாக இருக்கும் எமனை ஜெயித்து ஜோதி வடிவம் ஆகலாம். இதை வள்ளலார் அவர்கள் **அருட்ஜோதி ஆனேன் என்று அறையப்பா முரசு** என குறிப்பிடுகிறார்கள்.

*ஜீவசகோதரி சித்ரா:* விடியலாகிய பிரம்ம முகூர்த்த நேரத்தில் மெய் வணக்கத்தை பழகி வந்தால் இந்த மெய்ப்பாதையில் இலகுவாக பயணிக்கலாம் என்பது குருவின் உத்திரவு.

**அழுத்தமுற் றிருந்ந இருட்குலம் னெறிய ....**
**குடிசையில் விடிந்நனாள் கண்டேன்** **(னல்ல னாட் பிறப்பு)**

குருவின் அருளை பெறாத வரை மனம் உண்மையறிவு அறியாது அழுத்தத்தில் இருட்குலத்தில் இருக்கும். உலகின் இருளை சூரியன் போக்குவது போல், இந்தப் பிறவிக் கடலில் அறியாமை என்னும் இருளில் சிக்கிய நம்மை தமது சொல்வாக்காகிய கிரணக் கரங்கொண்டு ஞான சூரியனாக வரும் குருபெருமான், இருட்குலத்தில் உள்ளவர்களை அருட்குலத்தில் ஏற்றுகிறார்கள். இதை உணர்த்துவதே சூரியனார் கோவில். இறைவனின் சாயல் சப்த சப்தாதிய நிசப்தமாகும். ஓசை ஒளியாகிய இறைவன் எமன் கண்டு அஞ்சும் பஞ்சாட்சர திருமேனியாகவும், எண்டிசைக்கும் நான் என நிற்கும் பஞ்சாட்சரமாகவும், உணர்ச்சி, உணர்வு கடந்து உணர்வு உகார ரகிதமாகவும் விளங்குகிறான். நான் வேறு இறைவன் வேறு அல்ல என உணர்வதை மெய்வழி ஆண்டவர்கள்,

**னித்தியம் விளங்கும் னித்திலக் கடலே**
**னீனானென் றிரண்டிலாக் கடலே...** என அருளியுள்ளார்கள்.

ஒத்த பொருளாகிய நானை அறிவதையே,

**ஒத்ததறிவான் உயிர் வாழ்வான் மற்றையான்**
**செத்தாருள் வைக்கப்படும்** என்கிறார் வள்ளுவர் பிரான்.

மெய்வணக்கத்தில் தூங்காமல் தூங்கும் செயல் பழகி பற்றற்று மெய் வாழ்வில் வாழ்ந்து பழகி வரும் போதுதான் தன்னை அறிய இயலும்.

*ஜீவசகோதரர் சங்கர்:* அலைவற்ற மனமே, பரிசுத்தம் என்றும், பிரம்மம் என்றும் அறியலாம். அதை அறிய ஒட்டாமல் பல்வேறு திரைகளால் மறைக்கப் பட்டுள்ளதையே, வள்ளல் பெருமான் ஏழு திரை மற்றும் ஏழு சக்திகளாக குறிப்பிடுகிறார். கீழ்னோக்காக (னபுசாக) இருக்கும் நம் எண்ணங்களை மேல்னோக்காக (சிபத்தாக) மாற்றுவது பெரியோரின் னாதமே. ஒரு ஞான சூரியன் வந்து நம் பிறவி இருளை நீக்கும் போதுதான் விடியல். பெரியோர்கள் பழக்கி வைத்த ஆதி என்னும் இடத்தில் அமர்ந்தால் முக்தி எனும் மோட்ச சாம்ராஜ்யத்தை நாம் எல்லோரும் பெறலாம் என்பது திண்ணம்.

*ஜீவசகோதரர் வடிவேலன்:* அப்பா என்பவரை நைனா என்றும் குறிப்பிடுவர். 64 கலைகளுக்கு மேம்பட்ட கலையாகிய சொன்-னயனக்கலை உரைக்கின்ற நாவே நைனா. அவ்வாறு அவதரித்து வரும் ஒரு மெய்யான குருபிரானிடத்தில் அருட்செல்வத்தைப் பெற்று அழியாமை



Copyright © AMNA Trust, Chennai 

என்னும் பேரின்ப வாழ்க்கையை அடைய வேண்டும். அத்தகைய அருளை நாம் வாங்கி சேமித்து உள்ளத்தில் ஊணி வைக்கும் ஒழுக்க நெறியே அறம் ஆகும்.

இதனை வள்ளுவபிரான்,

**அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை இருள்சேர்ந்த**
**இன்னா உலகம் புகல்** என அருளியுள்ளார்.

என்ற பகிர்வுகளை தொடர்ந்து தோத்திரப் பாடலுடன் அவை நிகழ்வுகள் இனிதே நிறைவுற்றன.

**22-01-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சத்துவாச்சாரி சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. கிருஷ்ணமூர்த்தி**

**பெத்ததாயே னாவில் னின்று பேசுமம்மா...** என்ற தெய்வத் தேடு கூடகப் பாடலுடன் அவை நிகழ்வுகள் மலர்ந்தன.

*ஜீவசகோதரர் கௌதம்:* பொய்யுலக வாழ்வை மெய்யென நம்பி, வாழ்வு முழுவதையும் தொலைத்து இறுதியில் எமனின் பாச வலையில் சிக்கி எக்கோடி காலத்திற்கும் மீளமுடியாத னரக வாழ்வில் போக இருந்தவர்களை மீட்டு, கற்ப கோடி கால சலிக்காத இன்ப னாட்டிற்கு குருபிரான் தனது பேரிரக்கத்தால் ஏற்றி வைக்கிறார்கள். இதையே சத்திய வேதத்தில் **மனந்திரும்புங்கள் பரலோகராஜ்யம் மிக சமீபமாயிருக்கிறது** என கூறப்பெற்றுள்ளது. பரிசுத்தமான மாசு மருவற்ற இடமே தேவாதி தேவன் குடியிருக்கும் இடம். பரம்பொருளைப் பற்றி சதா செவிகள் மூலமாக சுவைக்கும் பொழுது தான் ஜீவன் வளர்ச்சி அடைந்து பிரகாச நிலையை அடைந்து சைவத்தை உணர்கிறது. பிரம்மமே ஏழைக்கு ஏழைபோல் வந்து மனுக்களின் குறைகளை நிவர்த்தி செய்து எக்கோடி காலத்துக்கும் பேரானந்த பெருவாழ்வை ஆசிர்பாதமாக வழங்குகிறது.

குருபிரானின் அருளமுதத்தைப் பருகும் ஒவ்வொரு ஜீவனும் இளமை மாறா திருமேனியாக இருக்கிறது. சத்தியம் திரண்ட சகல குணா னிதிக்கடலான பெரியோர்களே அன்னாட்டிற்கு போக்குவரத்தாகும் செயலை நம்மிடம் செய்து வைக்கிறார்கள். அந்தரத்தில் பட்டம் போல் பறந்து கொண்டிருக்கும் ஜீவனை இணைக்கும் கயிறான உயிரை இயக்கும் சூத்திரதாரி ஈசன். இருதயக்கண் கொண்டு ஈசனைப் பார்வையால் கவனித்து நிறுத்தி முடிச்சு போட வேண்டும். இதனை குணங்குடி மஸ்தான் சாகிபு தங்களின் மெய்ஞான பாடலில்

**கயிறற்று வீழும் முன்**
**சூட்சுமக் கயிற்றினைப் பாரடா**
**அதிசூட்சும கயிற்றினைப் பாரடா...**
**மாத்திரை நேரம் எமன் வரும் அப்போது**
**மற்றொன்றும் உதவாது உதவாது** என அருளியுள்ளார்கள்.

ஒலி, ஒளி மூலமாக புதுயுகம் படைக்கின்ற பெரிய செயலின் அரிய பலனைப் பெறுவதற்கு இங்கு குருபிரானின் கையகத்தில் சேர்ந்துள்ள ஒவ்வொரு மனு தலையும் எவ்வளவு உன்னதமான வித்து என்பதை ஒவ்வொரு ஜீவனும் நன்கு உணர வேண்டும். அன்னாட்டுக்குரிய மகா உன்னதமான வித்துக்களே இங்கு வந்துள்ள ஒவ்வொரு வித்தும். ஆதியான தோற்றத்திற்கும் அந்தமான முடிவிற்கும் மூலமாக இருப்பது விந்து னாதம். அதுவே பஞ்ச பூதங்களாக, பஞ்ஞாட்சரமாக, ஒளி, ஒலியாக நம் உடலில் மேவி நிற்கும் அன்பே சிவமாக உள்ளது. அணுக் கோடியிலும் நிறைந்த ஆதியான அனைத்துக்கும் சாட்சியாக விளங்கும் இறை வஸ்துவை, உணர்வெனும் கம்பமாக விளங்கும் னித்தியத்தை, ஞான முதல்வராக வரும் பெரியோர்கள் அறிய வைக்கின்றார்கள். அண்டத்தை அணுவிலும் அணுவை அண்டத்திலும் காட்ட வல்ல காருண்யப் பிரபுவாக வரும் குருபிரான் பாதம் பணிவோம் என்ற பகிர்வுகளை தொடர்ந்து அவை நிகழ்வுகள் இனிதே நிறைவுற்றன.



Copyright © AMNA Trust, Chennai 

**26-01-2023 ~ வியாழக்கிழமை ~ சத்துவாச்சாரி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. ஹேமாபதி வெங்கட்**

குருவின் நடுவில் விசுவமிருக்கின்றது. விசுவத்தின் நடுவில் குரு இருக்கின்றார். சகல ஜகத்துமாயிருக்கின்ற, ஆபத்து னேர்ந்ந காலத்துக்குச் சகல தர்ம வடிவமான ஒரே பந்நுவாகிய குருவன்றி உயர்ந்நது வேறொன்றுமில்லை. அத்தன்மைய குருவிற்கு னமஸ்காரம். **(குரு கீதை)**

*ஜீவசகோதரர் கௌதம்:* யாதொன்றின் துணையின்றி தன்னிச்சையாக செயல்படும் ஒன்றே சுயம்பிரகாசம். புற உலகில் சந்திர, சூரியனாக இருப்பதே நம்மிடம் நான் என்பதாக மனதுடன் சேர்ந்து ஐம்புலன்களின் வழியாக னின்று பிரகாசித்துக் கொண்டுள்ளது. அவன் தான் பார்க்கிறான், கேட்கிறான், னுகர்கிறான், வாசனை அனுபவிக்கிறான். னான் என்பது சேர்ந்த பிறகே மனம் இயங்குகிறது. இருளிலிருந்து முளைக்கும் னான் என்பதே ஜோதியாகவும், னாதமாகவும், படைப்புக் கர்த்தாவாகவும், காரண தேகத்தின் இரகசியமாகவும் உள்ளது. காலச்சக்கரத்தின் ஆட்சியில் னவகிரகங்ஙளின் பிடியிலிருக்கும் னம்மை காத்து இரட்சித்து அருள்பவர் னவகிரக கோள் மாற்றும் னாத ஜோதிடராகிய குருபிரான் அவர்களே. ஆபத்து வந்தந்ந னேரத்திலே ஆங்ஙாங்கு முன் வந்து னிற்க்கும் குருவே தெய்வம்.

***கொடி:*** **கூப்பிடுமாம் மின் வீசி கொடியி னுச்சி...** என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். கோயில்களில் அமைந்துள்ள கொடிமரத்தின் அடியில் சாஷ்டாங்ஙமாக விழுந்து வணாங்ஙுவதின் தாத்பர்யம், அஷ்ட அங்ஙமும் தரையில் படும்படி வணங்குவதும், எட்டு எனும் அகரமாகிய அங்கத்தை வணங்கும் செயலாகவும் உள்ளது. ஆலயம் என்பது ஆன்மா லயமாகக்கூடிய இடமாகவும், எட்டா னிலையில் இருக்கும் இறைவனே எண்குணத்தானாகவும், அகரமாகவும், ஜீவனாகவும் அறிவு வடிவாகவும் உள்ளான். இறைவன் ஓமென்றும், உணர்வென்றும், அறிவெனும் அமானித வடிவாக இருப்பதை அறிய ஆசானின் கொடியெனும் திரு **னா** ஆடவேண்டும்.

**குருபிரான் அருளமுதம்:**
நன்மனத்தினர் ஒருவரின் ஐயத்தை தங்ஙள் பேரிரக்க பெருங்ஙருணையினால், ***மடி*** என்பது னீ உன் சிற்றறிவினால் அறிய முடியாத தாய்மடியாக இருப்பதை அருளி அதுவே தன்னை அண்டியிருக்கும் மக்களுக்கு சொர்க்கமாகவும் இருப்பதையும் அருளினார்கள்.

*ஜீவசகோதரர் சங்ஙர்:* சுயம்பிரகாசம், கொடியின் இரகசியம், காலச்சக்கரத்தில் வாழும் மனிதன், ஆலயம் ஆகியவற்றின் உட்பொருள் இரகசியங்ஙளையும் ***மடி*** என்பது *செத்துமடி*யும் இடமாக இருப்பதையும் ஆசான் அருளால் அறியலாம். இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ என்ற பயம் னீங்ங, நம்மை காத்து ரட்சிக்கும் குருவினிடம் சரணாகதி அடைந்தால் துப்புரவாக அவரவருள் துலக்கும் ஆசானை மடிப்பிடியாக பிடித்துக்கொண்டு அதற்கான பலனையும், பிறவிப் பயனையும் பெறலாம் என்ற பகிர்தல்களுடன் தோத்திரப் பாடலுடன் அவை நிறைவுற்றது.

**28-01-2023 ~ சனிக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்**

**குருபெருமான் அருளமுதம்:**

**கோடாயிதக் கூர் திருவாக்கியம் எண் – 117:** அறிவு மழுங்கி அறியாமையால் உணர்ச்சி வசப்பட்டு கோபத்தில் ஒருவன் செய்யும் செயல் தீமையில் முடியும். சினம் என்பது கூற்றுவன். **பாவஞ்செய் யாதிரு மனமே - நாளைக் கோபம்செய் தேயமன் கொண்டோடிப் போவான்** என்பது கடுவெளிச்சித்தர் திருவாக்கு. ஞானப்பிதாவிடம் ஞானப்பால் அருந்தி தன் ஜீவனை



Copyright © AMNA Trust, Chennai

அறிந்து மெய்யுணர்வு பெற்றவர்களின் சகோதர வாஞ்சையே அவர்களின் தவமானது சிந்தாமல் காக்கிறது.

**ஏதிலார் குற்றம்போல் தங்குற்றம் காண்கிற்பின்**
**தீதுண்டோ மன்னும் உயிர்க்கு** **(திருக்குறள்)**

என வள்ளுவர் பிரானும் அருளியுள்ளார்.

*ஜீவசகோதரி லாவண்யா:* **மாயக் கூத்தின்வ கையறி யாமல் யான்... (குரு ஸ்தோத்திரம்)** அறியாமையால் வினையின் இருட்பிடியில் சிக்கிப் பிறவிச்சுழலில் சிக்கி மாயமான காயத்தில் நுழைந்து புலமாயையால் காயப்பட்டுக் களைத்திருந்தேன். மாரணமாகிய எமன் கைவசப்படாமல் காத்து, ஞானச்சுடரான அறிவுச்சுடர் ஏற்றி என் அறியாமை அகற்றி இரட்சித்து, பழியாகிய எமனைப் பயந்தோட விரட்டி நித்திய மகிழ்ச்சி வாழ்வளித்து தேவனாக்கி வைத்த அழியாப்பதி குடியேறிய னாயகம் என் குருவின் திருப்பாதம் பணிகின்றேன்.

**குருபெருமான் அருளமுதம்:**
சுவை, ஊறு, ஒளி, ஓசை, நாற்றம் எனும் ஐவகை மாயக் கூத்துக்கும் தலைவன் மாயையின் மொத்த உருவான மனம். சார்ந்ததின் வண்ணமாகும் மனதையே புல், பூடு, புழு, மரம், மிருகம், பறவை, பாம்பு, கல், மனிதன், பேய், கணங்கள், அசுரர், முனிவர், தேவர் என எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் என்கிறார் சிவபுராணத்தில் மாணிக்கவாசக சுவாமிகள். எழுவகைத் தோற்றத்தையும் நால்வகை யோனியில் உண்டாக்கிய இறைவனும் கூத்தாடியான மாயக்கூத்தன் (கூத்தாண்டவன்).

*ஜீவசகோதரர் விஜயகுமார்:* **பரிசுத்த வேதாகமம்** - வான்கனியாம் இருதயக்கனியை நிரூபிக்க வந்த பெரியோர்களின் வாய்மையே பரிசுத்தம். வேதம் அகத்தில் ஆகும் செயலே ஐந்து ஆகமங்களாக பஞ்சாட்சரமாக அருளப்பெற்றுள்ளது.
*ஆதியாகமம்:* ஆதியிலே தேவனாக இருந்த வார்த்தை நம்மை மறுபிறப்பாளனாக, தேவனாக்க வந்தது. எதற்கும் முதற்பொருளான ஜீவனைக் குறித்தும், ஜீவசுவாசத்தால் ஊதப்பெற்று, மறுபிறப்புப் பூமியான தன்னுலகம் உண்டான செயலையும் விவரிக்கிறது. ஆறு நாட்களில் ஓரறிவிலிருந்து ஆறறிவுப் பிறப்புகளாகவும், மறுபிறப்பான ஏழாவது பிறப்பே ஆசீர்பதிக்கப்பெற்ற ஏழாவது நாளாகவும் உள்ளது. **மனம் சும்மா இருக்க சுகம்** என்பதே ஓய்வுநாளாகும். சொர்க்க பூமியான ஏதேன் தோட்டத்தில் வினையற்று சும்மா இருக்காமல், இறைவனால் விலக்கச் சொன்ன கனியை மனதின் தூண்டுதலால் புசிக்கச் சொன்ன மாயையாகிய பெண்ணே ஏவாள் எனக் குறிப்பிடுகிறார்கள். தான் இந்த உடல் என நினைத்து நிர்வாணத்தை அவமானமாகக் கருதுகிறது மனம். ஜீவான்மாவிற்கு இந்த உடல் ஆடையாகும். பற்றற்று இருப்பதே நிர்வாணம், அதுவே சொர்க்கம். பற்றுடன் இருப்பது அவமானம், அதுவே நரகம். மனம் பின்னப்பட்டு மாறுபட்டு, புலன்கள் வேறுபட்டு நிற்கும்போது அதனுடன் போரிடுவதே சிலுவைப் போராக உள்ளது. அழிவுப்பாதையில் செல்லும் மனதுடன் போரிட்டு அறிவுப்பாதைக்கு அழைத்துச் செல்வதை, அழிவைக் காணாத தேசமான கானான் தேசத்திற்கு இறைதூதரான தீர்க்கதரிசியானவர் அழைத்துச் செல்வதே உபதேசமாக உள்ளது.

**குருபெருமான் அருளமுதம்:** பைபிள், குரான், பகவத்கீதை இவற்றை இறக்கியருளிய அருளாளர்கள் அவதரித்த தேசம், இனம், மதம், பாஷை வெவ்வேறாக இருந்தாலும் நாம் பெறக்கூடிய பயன் பலன் ஒன்று தான். **அல்லேலூயா**, **ஆமீன் ஆமீன்**, **ஓம் சாந்தி** என்பதும் ஒன்றுதான். இதை சமரசம், சமாதானம், சமத்துவத்தை உணரும்போது அறியலாம்.

*ஜீவசகோதரர் கோபிநாத்:* **பகவத்கீதை:** இதிகாசமான மகாபாரத குருஷேத்திரப் போர் என்பது அறிவுக்கும் அறியாமைக்கும் நடக்கும் போர். அறிவாகிய ஆசான் மனமாகிய சீடனுக்கு உபதேசம் அளிக்கும் இடம் குருஷேத்திரம். பகவானின் உபதேசமே பகவத் கீதை. வேதவியாசர் ஸஞ்ஜயனுக்கு அளித்த தெய்வீகப் பார்வையால், பார்வையற்ற திருதராஷ்டிரனுக்கு போர் நிகழ்வுகளைக் கூறும் செயல், தூரதிருஷ்டியான மூன்றாவதுகண் திறக்கப் பெற்று, முக்காலமும் உணரக்கூடிய செயலைக் குறிக்கிறது.



Copyright © AMNA Trust, Chennai

**வாசனை கேள்வி யிருகண்வா யெவைக்கும் வல்லமை யளிக்குமக் கண்** மூலம் தரிசனை காண்பதே தீர்க்கதரிசனம். அதைச் செய்து வைப்பவர் தீர்க்கதரிசியான குருபகவான்.

***அர்ஜுன விஷாதயோகம்:*** அர்ஜுனன் மரண பயத்தால் காண்டீபத்தை கை நழுவவிட்டு பகவானிடம் சரணாகதி அடைவதே இந்த யோகம். துரியோதனன் ஆணவ மலத்தால் ஓங்கிய அனீதியின் மொத்த உருவானவன். பரசுராமரின் சீடரும் கௌரவர்களின் பாட்டனார் ஆன பீஷ்மர், அனீதியான துரியோதனனுக்கு விதி வசத்தால் துணை போனதால் கடைசியில் வீழ்ந்தார். விதி நிறைந்த அனீதியின் குரலுக்கு செவி சாய்த்ததால் வீழ்ச்சியும், மதிநிறைந்த ஆசானின் னீதிச் சொல்லுக்கு செவிமடுத்தால் வெற்றியும் கிடைக்கும் என்பதே மகாபாரதத்தில் உள்ள நீதியாகும்.

**குருபெருமான் அருளமுதம்: அமுத கலைக்ஞான போதம் - இரண்டாம் காண்டம்:**

**அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது** **(திருக்குறள்)**

அறம் சார்ந்த வாழ்க்கையே இல்லறத்தின் சிறப்பு, பெருமை, மேன்மையாகும். ஜீவன் தளும்பி மனம் அலைபாயாமல் பாதுகாக்கும் அறச்செயலைப் பழக்கி வைக்கும் குருபெருமான் மேல் நாம் வைக்கும் அன்பு, இல்வாழ்க்கைக்கான பண்பும் பயனும் ஆகும். பாவுடன் வரும் பூட்டினை பூட்டடங்கா சொர்க்க லோகத்தின் சாவி கொண்டு திறந்து சொந்த வீட்டுக்குள் குடியேறி வாழ்வதே அறம். ஜீவகுகையில் வாழும் ஜீவஆன்மாவை வாதையுடல் நீக்கிப் பஞ்சபுலன் ஒடுங்கி மனம் திரும்பி சமரசமாகி சீதனமான சிவகங்கை நாட்டில் கலந்தால் வருவது சமத்துவம் சமாதானம். ஆசானின் தூய்மதியான முதுமொழி தேனாக செவியுட் பாய்ந்து, இதயம் ஏழுகடல் அதற்கதிகம் விரியச் செய்த என்பது, தூராதி தூரமானாலும் காணும் தூரதிருஷ்டியான மூன்றாவது கண்ணின் ரகசியமாக உள்ளது. புழங்காத பேச்சுலகில் கூர் இன்னதென்று அறிந்த கூர்மதி கொண்ட ஆதி மார்க்க னீதி அவை மக்களுக்கு இன்னூல் பூரணத்தை அளிக்கும் புதையலாக உள்ளது. பரிசுத்த ஆவி தெய்வத்தின் திருவடி போற்றி வணங்கி தோத்திரப் பாடலுடன் குருபிரான் அவையை நிறைவு செய்தார்கள்.

**29-01-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சத்துவாச்சாரி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. மணிமொழி மஞ்சுநாதன்**

*ஜீவசகோதரர் கௌதம்:* பிறவாமையும், மரணமில்லா பெருவாழ்வும் பெறுவதற்கு வழிகாட்ட வந்ததுவே மதங்கள். **வழி சரிகை முடிந்த முடிவிடமும் காட்டி (மெய்வழி னூல்).** சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்கு நன்னெறிகளை அறிந்து ஒழுகுவதே ஆசானின் இரக்கத்தைப் பெறுவதற்கான வழி. ஆசானின் மனோ னோக்கிற்கு இணங்கி, மூன்றாவது கண் ரகசியம் அறிந்து, தன் உலகமாகிய விடியும் சாலை னிலத்தில் வாழ்வதே சொர்க்கப் பதி வாழ்வாகும். ஞானம் உடலை வைத்து அமைவது அல்ல. **எண்சாண் உடம்பிற்கு சிரசே பிரதானம்**. தலைக்கு மேல் கால் கண்ட தலையான சாகாத்தலை ஒவ்வொருவரிடத்திலும் பிரம்ம முடியான அறிவிருக்கும் தலமாக உள்ளது.

**மயங்னா திருமனமே மயிர்ப்**
**பாலம் கடத்தும் குரு னாதரருகிருக்க - மயங்னாதிரு மனமே (பத்தியத்திடம்)**.

ஆறாவது அறிவாக விளங்கும் மனம் மற்ற ஜீவராசிகளுக்கு இல்லை. பொய்யும் மெய்யும் பிரித்துக் காட்டும் பொறுப்பிடம் அறிந்தால் சிறப்பென்னும் செம்பொருளை அடைவது எளிது.

*எதன் இருப்பினால் ஜகத்து உளதாகின்றதோ, எதன் விளக்கத்தால் அது விளங்குகின்றதோ, எதன் ஆனந்தத்தால் எல்லாம் ஆனந்திக்கின்றனவோ, அத்தன்மைய ஸ்ரீ குருவிற்கு னமஸ்காரம்.*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai 

மறைமொழியை தங்களின் ஒரு மொழிக்குள் வைத்து அருளும் நிறைமொழி மாந்தராகிய உத்தமப் பெருமான் தங்களின் னாதாந்தத் திறவுகோல் எனும் ஓர் எழுத்து மாத்திரைக் கோலால் அரை நொடிக்குள் மலமகற்றி நம் மனக்கண்ணைத் திறப்பிக்கிறார்கள்.

**சுருளிமுப் பத்திமுக் கோடிதே வர்மனு**
**ஜின் கள்வான் பூமியெலாம்**
**சூலில்வைத் தேவெளி யாக்கியின் னுமாக்கும்**
**தூலாதி சூட்சவித்தே** **(ஞான முறையீடு)**

வித்தில்லா வித்தாக விளங்கும் தூல ஆதி சூட்சவித்தே எல்லா ஜீவனிலும் ஆதி, அடி-முடி-னடு, ஜோதி, னற்றாள், திருவடி, அமானிதம் என உள்ளதை அறியும் அறிவு மனுவினிடத்தில் தான் உள்ளது. ஆண்டவர்கள் பொய் குருமார்களை ஈனம் பேசும் வண்டர்கள், களிம்பு மனத்தவர்கள், இழிவர்கள், சோம்பேறிகள், பாவிகள், தரித்திரியன் எனவும் அவர்களின் இழிசெயலில் இருந்து ஒதுங்கி புண்ணியத்திற்கான உருவாக வரும் ஆசானின் பாதம் பணிந்து னித்திய வாழ்வை கைக்கொள்பவர்களே புண்ணியர்கள் எனவும் அருளியுள்ளார்கள். வெற்றி விராட்பதியாக வரும் குருகொண்டல் அவர்கள் நம்மை ஏற்றி வைக்கும் வெற்றி வாழ்கையை,

**வேதமணி ஆழியில்விடி வெள்ளிகிளம்ப**
**வெற்றிக்கொடி யேறுமென்று ஊதிடுஞ்ஞங்ஙே**
**...**
**வெற்றிவீர கண்டாமணி வெள்ளிகிளம்ப**
**விண்ணவர்கொ டியேறுமென் றூதிடுஞ்ஞங்ஙே** என ஞானச்சங்ஙின் ஒலி கொண்டு முழங்குகிறார்கள்.

**இன்னில மாய்கை யாலும்**
**இடைஞ்ஞலின் வெட்கத் தாலும்**
**னன்னிலைக் கேற வொட்டா**
**னழுகிக்கீ ழிழுத்துத் தள்ளும்** **(குருமுறாதி)**

நம்மைக் கீழான எண்ணங்களில் இழுத்துச் செல்லும் மனதை, அறிவாக மேலேழு நிலைகளில் ஏற்றி மும்மூலமும் காப்பாக ஆக்கி வைப்பவரே ஆசான். வான அமிழ்தமான னாதத்தால், கிரந்தத்தின் முடிச்சுகளை அவிழ்த்து வைகுந்தம், கைலாயம் என்னும் அதி மகோன்னத நிலைகளில் நம்மை ஏற்றி வைக்கும் செயல் ஆதி மார்க்க னீதி அவையில் இன்று செயலாக னிகழ்ந்து வருகிறது.

*ஜீவசகோதரர் சங்கர்:* அறிவிருக்கும் தலமே இடம். அதுவே பொறிகள் ஓடாத இடமாக கோடி ஒளி காந்தி வீசும், ஒலி, ஒளி பொதிந்த, கங்குல் பகல் அற்ற இடமாக உள்ளது. இறக்கும் தலம் பிறக்கும் தலமாகவும், எல்லை திசை அற்ற இடமாகவும் உள்ள, ஃ எனும் பிரம்மத்து அருள் ஒளி பிறங்கும் தலமாகிய அவ் இடத்தில் குடியேறிப் பழகுவதே பிரம்மவித்தைச் செயல். யான்பெற்ற இன்பம் பெருக இவ்வையகம் எனும் சொல்லுக்கு ஏற்ப அனுபவித்து அறிந்து, நம்மையும் மெய்யனுபவத்தில் ஆக்கி வைக்கும் ஆதி மார்க்க னீதி அவையின் குருகொண்டல் பாதம் பணிந்து குடியோங்கி வாழ்வோம்.

**29-01-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. விஜயசித்ரா**

**சாங்ஙு கோள் கடந்த ஞானிக டமக்கும் சாங்ஙிச மெனுனிலை யுணர்த்தி...** என்ற தோத்திரப் பாடலுடன் அவை நிகழ்வுகள் உதயமாகின.

*ஜீவசகோதரி செல்வி:* **மவுன மாமணி மாடத்துள்ளேறவும்...** என்ற பாடலைத் தொடர்ந்து, **கோடாயிதக் கூர் வாக்கியம் எண் 316:** தாயின் கருவறையில் இருந்து வெளிவந்த நம்மை இறைவனே ஒவ்வொரு பிறப்பாக மாற்றி மாற்றி வளர்த்து வருகிறான். ஆறாவது



Copyright © AMNA Trust, Chennai

பிறப்பாகிய அறிவுப் பிறப்பில் பையன் என்ற பெயர் போய் மனுஷன் என்ற பெயர் வந்ததும் மனு ஈசனாக வேண்டிய தனிக்கடமை வந்துவிடுகிறது. கடமையை நிறைவேற்றி பிறவாமை பெற்றிட ஓர் மெய் குருபிரானின் துணையும் தயவும் அன்புமே முதலாக உள்ளது.

*ஜீவசகோதரர் சங்கர்:* ஒரு மெய் குருபிரானின் தயவால் தான் ஆறாவது அறிவின் லட்சணம் இன்னதென அறிந்து மனிதன் என்ற தகுதியைப் பெறுகிறோம். ஒவ்வொரு அறிவாக மாற்றி மாற்றி, தாயின் மிக்காங் கருணையுடன் நாம் தூங்கினாலும் நொடிப் பொழுதும் நம்மை விட்டு அகலாது காத்துக் கொண்டிருக்கும் உறுபொருளாகிய ஓர் பொருளை தேடிப் பெறுவதற்கான கைம்முதலே ஆறாவது அறிவு. ஓர் மெய் குருபிரானைச் சார்ந்து வைராக்கியம், துணிவு கொண்டு நிலைத்து நின்று சாதித்தால் ஏழாவது பிறப்பாகிய தேவப்பிறப்பு பெற்று நிச்சயமாக பிறவாமை பெறலாம்.

*ஜீவசகோதரர் தாமோதரன்:* **ஓங்நாரத் தொனியான கபாலத்தே...** என்ற பாடலைத் தொடர்ந்து, குருபிரானின் அருளால், ஆதி மார்க்க னீதி அவைக்கென அமைய உள்ள இடம் வருங்கால சந்ததியினரின் அறிவு கூரோங்கும் செயலுக்கான இடமாக விளங்கும் என்பது நிச்சயம். **இடமதுவும் னிசமென்றாற் பொறிகளோடா திருந்து விடு கோடி யொளி காந்நி வீசும்.** பேருந்திலோ, இரயிலிலோ, விமானத்திலோ நமக்கு ஏதுவான இடம் பிடிக்க விளையும் நாம், நமது பொறிகள் ஓடாத இடம் பிடிப்பதற்கு இச்சை கொள்ளவில்லை என்பதே உண்மை. அப்படியான இடத்தில் நம்மை குடியேற்றிட, சொல்லேர் உழவனாக வரும் குருபிரான், நமது மனமெனும் பாழ் நிலத்தை பண்படுத்தி, அதில் வித்தில்லா வித்து விதைத்து, னல விளைவுப் பயிரேற்றி, பொன்னில வளத்து மாணாக்கனாக நம்மை ஆக்குகிறார்கள். வடவை அனலாகிய ஆசானின் நாதமே நம் மும்மலக் கிழங்கை வேருடன் அறுத்து, சுபிட்ச மழை பொழிந்து, நமது னீங்கா னன்னிலத்தைச் செழிக்க வைக்கிறது. ஆண்டவர்கள் அருளிய ஏறுதுறை மறை உலகப் பாடல்களின் கற்பனைக்கு எட்டாத ரகசியங்கள் யாவும் செயலாகும் இடமே ஆதி மார்க்க னீதி அவை.

*ஜீவசகோதரர் சங்கர்:* நம் பொறிகள் ஓடாத இடம், **ஆதியில் போய் இருந்து விடு** என்ற சூட்சுமமாக இருக்கிறது. **வீசு னெருப்பாறு மயிர்ப் பாலத்துக் கப்பாலே வித்தகமாய் விளங்நி னின்ற பெற்றவிடம் காட்டி, கஞ்ஞாத்தன் னிடம் பார்த்து அருந்தும் காலம்** என, ஆண்டவர்கள் அருளியுள்ள செயல், அவரவரின் சொந்த மனையாக, தன் பெருவெளியாக விளங்கும் எட்டிரண்டும் பத்தான அவ்விடமாகவும், அதனைச் சென்றடைவதே பிறவாமைக்கான வழியாகவும் உள்ளது.

**குருபிரான் அருளமுதம்:**

தனித் தலைமைப் பெரும்பதியாக விளங்கும் அவ் இடத்தை அன்பெனும் விசேஷம் கொண்டே வாங்க முடியும். அல்லாஹ்வின் கயிற்றால் கட்டப்பெற்ற வேதமே திருக்குர்ஆன். வேதப் பொருளாக விளங்கும் ஆன்மாவிற்கான சாட்சியே பிராணன். அல்லாஹ்வின் கயிறும் அவரவரின் நாமமும் ஒன்றே. மெய்ஞ்ஞான நிலைகளுக்கு தாய்பீடமாக விளங்கும், நம் பாரதத்தின் பல மொழி, சாதி, குல, கோத்திர மக்கள் யாவரும் உள்ளுணர்வெனும் கயிறால் கட்டப் பெற்றுள்ளனர். அவரவரிடத்திலும் உணர்வுகார ரகிதப் பொருளாக விளங்கும் இறைவனை நிரூபிக்கும் செயல் கொண்டதே **ஆதி மார்க்க னீதி அவை.**

**சேர்ந்நதால் னாம்பெற்ற பேறனந்நம் பேறனந்நம்**
**செப்பத்தொ லையாத வப்புதுமை**

**செப்பும்பூ மிசந்நிர சூரியாளும் சூரியாளும்**
**சேர்ந்நமுன் காலயு கந்நொடுத்து**

**ஒப்பிம கத்துஎல் லோருமின்னாள் எல் லோருமின்னாள்**
**ஓதியெ திர்பார்த்தந் நப்பரிசு** **(சன்னதம் பெறு பருவம்)**



Copyright © AMNA Trust, Chennai February 2023

என்ற **பசுபதத் தவக்கோலப் பா** பாடலுடன் குருபெருமான் அவையை நிறைவு செய்தார்கள்.

## இசை வகுப்புகள்
## தொகுப்பு: ஸ்ரீமதி. லாவண்யா வாசுதேவன்

### 08-01-2023 ~ ஞாயிற்றுக்கிழமை

**பூமியின் பாரந்தீர்க்க...** என்ற தோத்திரப் பாடலுடன் இசை வகுப்பு தொடங்கப் பெற்றது. அமுதக்கலைஞான போதம் முதற் காண்டம்: **பரமனே உருவெடுத்து...** என்ற பாடலும், **என்னமோ என்று உம்மை...** என்ற இரு பாடல்களும் ராக தாளமுடன் பாடுவதற்கான பயிற்சி அளிக்கப்பெற்று அவை நிறைவுற்றது.

### 29-01-2023 ~ ஞாயிற்றுக்கிழமை

இசை வகுப்பில் முதலில் **அளவிலா வெகு காலமிப்பூமியில்** என்ற குரு ஸ்தோத்திரப் பாடலுடன் இசை வகுப்பு தொடங்கப் பெற்றது. தொடர்ந்து பூரணவண்ணப்பா பாடலில் இருந்து **வடவை அனலும் மெழ ... முனிவோரே** என்ற பாடல் பாடுவதற்கான பயிற்சி அளிக்கப் பெற்று அவை நிறைவுற்றது.

குரு வாழ்க ! குருவே துணை !!

*எதன்கண் இவை எல்லாம் னிலைத்திருக்கின்றனவோ, எதன் விளக்க வடிவத்தால் இவை யாவும் விளங்நுகின்றனவோ, எதன் பிரியத்தால் புத்திரன் முதலியோர் பிரியமா யிருக்கின்றனரோ, அத்தன்மைய ஸ்ரீ குருவிற்கு னமஸ்காரம்.*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai 

# 2023 - ஜனவரி மாத அவை னிகழ்வுகள்

**01-01-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ புத்தாண்டு சிறப்பு சபை**
**இடம்: சென்னை (பாக்கம்)**

சென்னை பாக்கத்தில் உள்ள ஜீவசகோதரர் கிருஷ்ண மூர்த்தி இல்லத்தில், ஆதி மார்க்க னீதி அவையின் புத்தாண்டு சிறப்பு சபை குருபிரான் அருளமுத வர்ஷிப்புடன் நடைபெற்றது. ஆதி மார்க்க னீதி மொழி மின்னணு சஞ்ஞிகையை தொகுத்து வழங்கும் ஜீவ பிறவியர்களுக்கான விருதும், மற்றும் தாம்பூல மரியாதைக்குரிய அங்கத்தினர்களுக்கான சிறப்பும், புதிய அங்ஙத்தினர்கள் சேர்க்கையும், நடைபெற்றது. அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பெற்றது.





**15-01-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ பொங்ஙல் சிறப்பு சபை**
**இடம்: சிவகாசி**

ஆதி மார்க்க னீதி அவையின் பொங்ஙல் திருனாள் சிறப்பு அவை குருபிரான் முன்னிலையில் சிவகாசியில் சிறப்பாக நடைபெற்றது. அங்ஙத்தினர்களின் சேர்க்கையும், தாம்பூல மரியாதைக்குரிய அங்கத்தினர்களுக்கான சிறப்பும் அளிக்கப் பெற்றது. அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பெற்றது.





Copyright © AMNA Trust, Chennai 







Copyright © AMNA Trust, Chennai

**26-01-2023 ~ வியாழக்கிழமை ~ ஞாயிறு கோயில்**

குருபிரான், தனது அங்கத்தினர்கள் மற்றும் நன் மனத்தினருடன் செங்குன்றம் அருகே உள்ள ஞாயிறு கோயிலுக்கு விஜயம் செய்தார்கள்.




## ஆதி மார்க்க னீதி அவையின் வருங்கால நிகழ்வுகள்

| நாள்/ இடம் | னிகழ்வுகள் |
|---|---|
| **05-03-2023 / சென்னை** | மெய்வழி குழந்தைசாமி கவுண்டர் ஐயா அவர்களின் ஆண்டு பூர்த்தி |



Copyright © AMNA Trust, Chennai

## 2023 ஜனவரி மாதம், AMNA அறக்கட்டளைக்கு நன்கொடை அளித்தவர்கள்

மணிவண்ணன்
புன்னகை
குமரேசன்
ராஜேந்திரன்
முருகன்
சீனிவாசன்
ஜெய்குமார்
மோகன் சித்ரா
பழனிவேல்
இன்பலதா
ராஜமகேஷ்
மணிமாறன்

பாஸ்கர்
ஜெயபிரகாஷ்
மாதவன்
மஞ்சுநாதன்
செல்லம்மா
உமாராணி
கிரகதுரை
தியாகராஜன்
வெங்கடேச முத்து
கிரிதரன்
தபேஸ்வரி காளிதாஸ்
சபிதா

தனராஜன்
கிருஷ்ணமூர்த்தி
வேலு
திருமுருகன்
வடிவேலன்
பழனி செல்வராஜ்
பழனிகுமார்
சீனிவாசன். காஞ்சிபுரம்
கார்த்திகேயன். சிவகாசி
மகேஷ். மதுரை

AMNA அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்க ஆர்வம் உள்ளவர்கள், கீழ்கண்ட வங்கிக் கணக்கில் அனுப்புமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

Account Name: **Aathi Margha Neethi Avai**
Account Number: **50200047470073**
IFSC: **HDFC0000323**
Branch: **Mylapore**



Copyright © AMNA Trust, Chennai

All Rights Reserved

***Published by:***
***AMNA TRUST (Registration No. 163/2019)***
***13/2, Hyder Garden 2nd Street, Otteri ,***
***Chennai – 600012***

***www.amnatrust.org***

**Contact Us**:

*Email: message2amna@gmail.com*

*YouTube Channel: https://youtube.com/c/amnatrust/*

*Facebook Page: https://www.facebook.com/amnatrust/*

*Twitter Page: https://twitter.com/TrustAmna*

*Instagram: https://www.instagram.com/amnatrust*

*__பின்குறிப்பு__: இம்மின்னணுச்சஞ்சிகையில் தவிர்க்க இயலாது வரும் சில தட்டச்சுப் பிழைகளை அங்கத்தினர்கள் பொறுத்து அதனைத் தங்கள் பிரதிகளில் திருத்தி படித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். பிழைகளைத் தவிர்ப்பதற்கான முயற்சியை வெளியீட்டு குழு தொடர்ந்து மேற்கொள்ளும்.*

***The Editorial Team:***

*Shri. Vijaya Shankar, Sivakasi*
*Shri. Venkatesa Muthu, Chennai*
*Shri. Vadivelan, Chennai*
*Shri. Manimaran, Chennai*
*Shri. Thiyagarajan, Chennai*
*Shri. Chiranjeevi, Chennai*

*Issue 19 - Month: February 2023*



Copyright © AMNA Trust, Chennai